
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1—15 மே '88
3 - 12
விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# ரேஷன் கடை ஊழலுக்குப் பின்னணி




தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் (TNCSC) என்பதன் கீழ் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான ரெவின்யூ கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் தொடங்கும் போது மக்களுக்கு அதிலும் கிராமப்புற மக்களுக்கு சிறந்த சேவை என்றும், வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்றும் அலங்காரமாக வாய்பந்தல் போட்டவர்கள் கடந்த 1.10.87 முதல் இக்கடைகளைக் கூட்டுறவுத் துறையுடன் மீண்டும் இணைத்துவிட்டு பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கையை கேள்விக் குறியாக்கியுள்ளனர் இது தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையும் (1987 பிப்ரவரி) கடந்த ஓராண்டு காலமாக காலில் போட்டு மிதித்து வருகிறது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகம்.

நியாய விலைக் கடைக்காரர்களுக்காக பரிந்து எழுதுகிறீர்கள் என்று சிலர் நம்மை பார்த்து முறைக்கலாம். முறை கேடுகளும், ஊழல்களும் செய்து மக்களுக்கு சேர வேண்டிய பலனை உறிஞ்சிக் கொழுப்பவர்கள் ஜனாதிபதியாக இருந்தாலும், நியாய்விலைக் கடையில் இருந்தாலும் நாம் எதிர்க்கிறோம். இவர்களில் சேவை மனப்பான்மையும், நியாய உணர்வும் கொண்டவர்களும் சிலராவது உள்ளனர் என்ற அடிப்படையிலும், நியாய உணர்வோடு செயல்பட விரும்புவர்களும் ஊழல் செய்ய நிர்பந்திக்கப்படுவதையும் இங்கு எழுதப்பட வேண்டும் என்று கருதுகிறோம்.

பல்வேறு வழிகளிலும் மேலதிகாரிகளுக்கு கப்பம், சேமிப்பு கிடங்கிலிருந்து கடைகளுக்கு சரக்கு போடும் நபர்களுக்கு தர வேண்டிய மாமூல், பல்வேறு காரணங்களுக்காக அற்பசம்பளத்திலும் பிடித்தம் என ஆரம்பக் காலத்திலிருந்தே இதன் ஊழியர்கள் அரித்தெடுக்கப்படுகிறார்கள் 'அஞ்சு காசு சம்பளம் ஆனாலும் அரசாங்க வேலை' என ஆரம்பத்தில் மனைவி, உறவினர் நகைகளை அடகு வைத்ததோ, கடன் பெற்றோ செலவு செய்பவர்கள் சிறுக சிறுக ஊழல் செய்யத் தொடங்குகிறார்கள். இதற்கு பலியாகாமல் மேலதிகாரிகளில் நச்சரிப்பைக் கண்டு கொள்ளாதவர்கள், அதிகாரிகளுக்கு கப்பம் செலுத்த மறுக்கின்றவர்கள், தனிமைப்படுத்தப்படுகின்றனர்; சிறு தவறுகளுக்குக் கூட திடலடியாக வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர்.

உதாரணத்திற்கு, மக்களுக்கு விநியோகிக்க வழங்கப்படும் 100 கிலோ மூட்டையை முறையாக எடைபோட்டு விநியோகித்தால் 3 கிலோ முதல் 7 கிலோ வரை குறையும். இவ்வாறு குறைவதற்கான தொகை விற்பனைப் பயிற்சியாளரின் சம்பளத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். நியாய விலைக்கடையில் விநியோகிக்கப்படும் சர்க்கரை விலை கிலோ ரூ. 5.10, வெளி மார்க்கெட் விலை ரூ.6 எனில் குறையும் எடைக்காக விற்பனையாளரிடமிருந்து வெளிமார்க்கெட் இரட்டிப்புத் தொகையாக 1 கிலோவிற்கு ரூ.12 பிடித்தம் செய்கின்றனர். அரிசி நியாய விலைக் கடையில் 1 கிலோ விலை 2.25 வெளி மார்க்கெட் விலை ரூ.4 எனில் அதன் இரட்டிப்புத் தொகை ரூ.8 வீதம் பிடித்தம் செய்கின்றனர்.

மண்ணெண்ணெய் பேரலில் உயரத்தை அளந்து இவ்வளவு லிட்டர் உள்ளது என்று அதிகாரிகள் கணக்கெடுத்து கடைகளுக்கு அனுப்புகின்றனர். சொட்டையான பேரலாக இருந்தால் குறையும் மண்ணெண்ணெய் தொகை விற்பனையாளரின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. 200 லிட்டர் என்று கணக்கு சொல்லி வழங்கப்படும் பேரல்களில் 190 அல்லது 180 லிட்டர் அளவு மண்ணெண்ணெய் தான் அதிகபட்சம் இருக்கும்.

'பலவழிகளில் தொழிலாளர்களை ஏவி சுரண்டிக்கொழுத்த நிர்வாகம் கடைசியில் தொழிலாளர்களுக்கு போட்டது என்னவோ, பட்டை நாமம்தான்! உணவுப் பொருட்கள் வழங்கீட்டு துறையை சேவைத் துறையில் பட்டியலிட்டு காட்டும் அரசு வெட்கமே இல்லாமல், இலாபம் இல்லையென இக்கழகத்தின் மொத்த கடைகளையும் கூட்டுறவுத்துறைக்கு மாற்றிவிட்டது. வர்த்தக சூதாடிகளிடமும், கள்ள மார்க்கெட் பேர்வழிகளிடமும் நிர்வாகம் கணிசமான அளவு கையூட்டு பெற்றுக் கொண்டு தன்கீழ் இருந்த உணவுப் பொருட்கள் சந்தையை அவர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டது.

இத்தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கிய, தி.மு.க. அ.தி.மு.க காங்கிரசு கட்சி ஒட்டு சீட்டு தொழிற்சங்கங்கள் ஆண்டுக் கணக்கில் உயர் நீதிமன்றம் உச்சநீதி மன்றம் என ஏறி இறங்கின. ஒரு வழியாக உச்ச நீதி மன்றம் 'நட்டம் காரணமாக கூட்டுறவுத் துறையுடன் இணைக்கப்பட்டால் விற்பனைப் பயிற்சியாளர்களுக்கு பணிப்பாதுகாப்பு தரப்பட வேண்டும். விற்பனை பயிற்சியாளர்கள் என்பதை மாற்றி 'பில்கிளார்க்' பதவியும், அதற்குண்டான சம்பளமும் (ஏறக்குறைய ஆயிரம் ரூபாய்) வழங்கப்பட வேண்டும். 15 நாட்கள் அவகாசத்தில் இந்த உத்திரவை அமுல்படுத்த வேண்டும்' என பிப்ரவரி '87ல் தீர்ப்பளித்தது. ஆனால் நிர்வாகமோ, தீர்ப்பை குப்பைக் கூடையில் வீசியது. 1.10.87ல் அனைத்து கடைகளையும் கூட்டுறவுத் துறையுடன் இணைக்கப்படும். விருப்பம் உள்ளவர்கள், கூட்டுறவு துறைகடைகளில் விற்பனையாளர் பதவிக்கு 15.9.87 விண்ணப்பிக்கலாம் என சுற்றறிக்கை அனுப்பி அதை நடைமுறைபடுத்தியது. வேலையும் போய்விடுமோ? என 80 சதவீத ஊழியர்கள் மறுபேச்சு பேசாமல், மாதம் 200 ரூபாய் சம்பளத்திற்கு புதிதாக கூட்டுறவு துறையில் இணைந்து கொண்டனர். அவ்வாறு சேரமறுத்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தக்கோரி, உறுதியாக போராடிய 20 சதவீத ஊழியர்களுக்கு 11 மாத காலம் எந்த வேலையும் கொடுக்காமல், மாதம் 150 ரூபாய் சம்பளம் மட்டும் கொடுத்து வந்தது. கடைசியில், 'பகுதி நேர காவலர்கள்' என்ற புதுபதவியை உருவாக்கி பழைய சம்பளத்தில் அவர்களுக்கு 'புதியப் பதவியை கொடுத்தது. மாவட்டம் விட்டு மாவட்டம் இடமாற்ற உத்திரவு வேறு அவர்களுக்கு. அதற்கான பயணப்படிக்கூட இன்றளவும் இவர்களுக்கு கிடையாது.

வஞ்சிக்கப்பட்ட தொழிலாளர்கள் இனியாவது உணர வேண்டும்! அரசையும் நிர்வாகத்தையும் அடிபணிய வைக்கும் புதிய போராட்ட முறைகளில் முன்னேறாமல், மேலதிகாரிகளின் காலடிகளிலும், நீதிமன்ற வாயில்களிலும் காத்துகிடப்பதால் கோரிக்கைகள் நிறைவேறாது. மாறாக துன்பங்கள்தான் பெருகும்!

உழைக்கும் மக்களுக்கு, உணவுப் பொருட்களை 'தில்லுமுல்லு'கள் செய்து எடைக்குறைத்து போடுவது, வழங்காமல் இருப்பது, அதிகாரவர்க்க சிகப்பு நாடா உத்திரவுகளில் தாமும் குளிர்காய்ந்து பொது மக்களை ஏமாற்றுவது என குறுக்கு வழியில் சில்லறை தேட முயற்சிப்பதை விடுத்து, அரசால் பாதிக்கப்படும் உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து தங்களின் நியாயமான உரிமைகளை போராட்டத்தின் மூலம் அடைய முன் முயற்சி எடுக்க வேண்டும்.

**மோகன், கடலூர்**

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

12

1—15 மே '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# தப்பியோடும் முன் தண்டனை கொடுப்போம்!

அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் எல்லாம் அம்பலத்திற்கு வந்து விட்டன. பினாமிகளான இந்துஜா, பச்சன் சகோதரர்கள் அடையாளம் காட்டப்பட்டு விட்டனர். நன்றாக தெரிகிறது; பீரங்கி, கப்பல் பேர ஊழல்களில் ராஜீவும் அவரது குடும்பத்தினரும் தான் கேந்திரமான புள்ளிகள் என்று எல்லோருக்கும் தெரிகிறது.

ஒரு மார்க்கோஸ் போல, ஒரு நொரீகா போல, தாய்நாட்டையே தாரை வார்த்து, தரகு பெற்று, அன்னிய வங்கிகளில் பணத்தை குவித்து வைத்துக் கொண்டு, ஆபத்து ஏற்பட்டால் குடும்பத்துடன் நாட்டை விட்டே ஓட ஏற்பாட்டுடன் தயாராகவுள்ள ஒரு தேசதுரோக கயவாளி தான், பிரதமர் பதவியில் அமர்ந்திருக்கிறார் என்று எல்லோருக்கும் நன்றாக தெரிகிறது.

ஆனாலும் ஒன்றையும் கிழிக்க முடியவில்லை. எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் எத்தனை வழிகள் உண்டோ அத்தனை வழிகளையும் கையாண்டு பார்த்து விட்டார்கள். பாராளுமன்றத்தில் கேள்விக்கணை தொடுத்துப் பார்த்தார்கள், வெளிநடப்பு செய்து பார்த்தார்கள்; சபாநாயகரிடம் நியாயத்தை விளக்கி எவ்வளவோ வாதாடினார்கள். கடைசியில் பாராளுமன்ற கமிட்டி அந்த சிம்மாசன திருடருக்கு பாராட்டுக் கடிதம் வழங்கிவிட்டது.

அரசியல் சட்டத்தின் மூலமோ, நீதிமன்றத்தின் மூலமோ அந்த ஊழல் பெருச்சாளி மீது ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போட முடியவில்லை.

ஊழல், லஞ்ச குற்றங்களைப் புரிந்தவர் எந்தப் பதவியில் இருந்தாலும் அவரைத் தண்டிக்கும் ஆற்றல் நிலவுகின்ற நீதி மன்றங்கள், பாராளுமன்றங்கள், சட்ட திட்டங்களுக்கு உண்டு; அதுவே இந்திய ஜனநாயகத்தின் அடித்தளம் என்று சொல்வது எவ்வளவு பெரிய ஏமாற்று வித்தை என்பது நிரூபணமாகிவிட்டது. லஞ்ச ஊழலில் புழுத்து நாறும் பேர்வழிகள் தங்களது நாற்றத்தை போக்க பூசிக் கொள்ளும் புனுகு, அத்தர்களே இந்த 'புனிதமான நிறுவனங்கள்' என்பது பட்டவர்த்தனமாகிவிட்டது.

ஊழல் கூட்டு களவாணிகளும் விசுவாச நாய்களும் கொடுத்த சான்றிதழ்களை வைத்துக் கொண்டு பரிசுத்தம் என ராஜீவ் கொக்கரிக்கிறார். அம்பலப்படுத்துபவர்களை அவதூறு செய்கிறார்; பொய் வழக்குகள் போடுகிறார்; சி.பி.ஐ. போன்ற தனது வேட்டை நாய்களை ஏவி விடுகிறார். உங்களால் என்ன செய்ய முடியும் என ஏளனமாக கேட்டு கைகொட்டி சிரிக்கிறார்.

தனக்கு எதிரான எதிர்ப்புகளை தேசதுரோகம், நாட்டைத் துண்டாட சதி என சித்தரித்து, ஒடுக்குவதற்காக 59-வது அரசியல் சட்டத்திருத்தம் உட்பட பயங்கர கருப்புச் சட்டங்களை போட்டு கையில் வைத்துள்ளார். அவசர நிலையைப் பிரகடனமும் செய்ய தயாராக உள்ளார்.

இதை இனியும் அனுமதிக்கப் போகிறோமா? அல்லது எதிர்த்துப் போராடப் போகிறோமா? ஒவ்வொரு இந்தியனின் சுயமரியாதைக்கும் விடப்பட்டுள்ள சவால் இது.

ராஜீவிற்கு எதிரான போராட்டத்தை ஒரு கட்டத்திற்கு மேல் எடுத்துச் செல்ல வோட்டுப் பொறுக்கி எதிர்க்கட்சிகள் அனைத்தும் அஞ்சுகின்றன. ராஜீவ் காந்தி அவசரநிலையைக் கொண்டு வந்து விடுவார் என எண்ணுவது ஒரு காரணம். அதை விட முக்கியமானது, இந்த பாராளுமன்றங்கள், நீதிமன்றங்கள், சட்டதிட்டத்தின் மீதே அவநம்பிக்கை ஏற்பட்டு, அவைகளைத் தூக்கியெறிய போராடும் கம்யூனிசப் புரட்சியாளர்களின் அணிக்கு மக்கள் சென்று விடுவார்கள் என்பது தான் காரணம். இந்த நிறுவனங்கள் நீடிக்கும் வரை தான் இவர்களால் பதவி சுகத்தை அடைய முடியும்.

எனவே, நிலவுகின்ற அரசு கட்டமைப்பையும அதன் துணை நிறுவனங்களையும் தூக்கியெறிய போராடுவது தான் ஊழல், லஞ்ச தேச துரோக குற்றவாளிகளை ஒழிக்கும் உத்திரவாதமான வழியாகும்; உழைக்கும் மக்களுக்கு அதிகாரத்தையும் உண்மையான ஜனநாயகத்தையும் கொண்டு வர அடிக்கல் நாட்டுவதும் அதுவே.

படிப்பகம்

www.padippakam.com





# காலி மைதானத்தில் காங்கிரசு கோமாளிகளின் கூத்து

சென்னையில் ''ஜம்போ சர்க்கஸ்' தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறது — அதாவது பரபரப்போடும் அரங்கு நிறைந்த காட்சிகளாகவும் வெற்றிகரமாக நடந்து வருகிறது. அதைப் பார்த்து காங்கிரசுக்காரர்களுக்கு வயிற்றெரிச்சல் கண்டிருக்க வேண்டும் அல்லது எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்திருக்க வேண்டும் — ''சர்க்கஸுக்குக் கூடும் கூட்டம் கூட காங்கிரசுக்குக் கிடையாது; வெறிச்சோடிக் கிடக்கும் மைதானத்தைப் பார்த்து உங்கள் தலைவர்கள் ஏன் வீணாகப் பேசுகிறார்கள்?'' என்று எதிர்க்கட்சியினர் கேட்டிருக்க வேண்டும்.

''சென்னையிலே ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டிக் காட்ட வேண்டும்; ஜம்போ சர்க்கஸை விஞ்சி விட வேண்டும்'' என்கிற லட்சிய வேகத்துடன் காங்கிரசுக்காரர்கள் தீர்மானித்தார்கள். குறிப்பாக மூப்பனார் — சிதம்பரம் கும்பல் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டது. பெரும் கூட்டத்தைத் திரட்ட வேண்டும், அதுவும் ஜம்போ சர்க்கஸுக்குப் போட்டியாக ஒரு பெரிய புல்லரிக்கும் காட்சியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார்கள். அதன் விளைவுதான் சென்னை அருகே உள்ள மறைமலை நகரில் ஏப்ரல் 22, 23, 24 ஆகிய தேதிகளில் நடந்த அகில இந்தியக் காங்கிரசு மாநாடு.

சர்க்கசின் நிர்வாகிகளான மூப்பனாரும் சிதம்பரமும் ரசிகர்களைக் குஷிப்படுத்துவதற்காக தாமே தலைமையேற்று கோமாளி வேஷம் கட்டிய காட்சிகளும் உண்டு. சர்க்கஸ் காரியங்களுக்குரிய கவர்ச்சிகரமான வித்தைகளைக் காட்டும் முயற்சிகளை ஜெயந்தி நடராஜன், வைஜயந்திமாலா பாலி, ''தேசீய இளந்தலைவி'' நடிகை தீபா போன்றவர்களிடம் விட்டு விட்டார்கள்.

உயிரைப் பணயம் வைத்து சாகசங்களைச் செய்து காட்டும் சர்க்கஸ் வீரனாக வந்திருந்த ராஜீவ் காந்தியோ பல சமயங்களில் பிரதானக் கோமாளியாகி சேட்டைகள் செய்து காட்டினார். மொத்தத்தில் சென்னையில் நடந்து வரும் ஜம்போ சர்க்கஸா? மறைமலை நகரில் நடந்து முடிந்த காங்கிரசு மாநாடா? எது விஞ்சியது என்று முடிவு செய்ய முடியாமல் சென்னை மக்கள் திணறிப் போய் விட்டார்கள்! என்ன இருந்தாலும் காங்கிரசின் நூறாண்டு அனுபவம் ஒரு அடி தூக்கலாகவே தெரிகிறது.

சர்க்கஸ் என்றால் தவறாமல் இடம் பெறுபவை பெரிய சுழல் விளக்கும் ராட்சத பலூனும், சர்க்கஸ் ஆரம்பமாகி விட்டதைக் குறிக்கும் விளம்பரங்கள் அவை. காங்கிரசு மாநாட்டிற்கும் அவை வேண்டாமா? ''காங்கிரசு நெடுநாள் வாழ்க!'' என்று எழுதப்பட்ட ஒரு பெரிய பலூன் பறந்து கொண்டிருந்தது. கைச் சின்னத்தின் வடிவத்தில் இன்னொரு ராட்சத பலூனைப் பறக்கவிட காங்கிரசு நிர்வாகிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கடைசி நேரத்தில் அது காலை வாரி விட்டது. பல முறை காற்றடித்து படாதபாடு பட்டும் அது எழும்ப மறுத்து விட்டது.

வழக்கமான சர்க்கசில் கோமாளிகளின் சேட்டைகள், கேளிக் கூத்துக்கள்தான் முதலில் இடம்பெறும். காங்கிரசு சர்க்கசில் முதல் காட்சி திகைக்க வைக்கும் வீரசாகச விளையாட்டு. உயிரைப் பணயம் வைத்து ராஜீவ் காந்தி நடத்திக் காட்டினார். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு எதிரே உள்ள திரிசூலம் ரயில் நிலையத்திலிருந்து காமராஜர் நகர் - மறைமலை நகர் போய்ச் சேர்ந்த துணிச்சல் மிகு சாதனையை நிகழ்த்தினார். நாலு அடிக்கு ஒரு ஆயுதந் தாங்கிய காவலர், காங்கிரசு தலைவர்களுக்கும் பூமாலைக்கும் கூட ஆயுத சோதனை, சுற்றிலும் ''கறுப்புப் பூனைப் படை புடை சூழ'' நடந்த இந்த கூத்தை வீர சாகசமாகத் தானே கருத வேண்டும்!

சர்க்கசு விளம்பரத்தில், சர்க்கசு சுந்தரிகள் வீர விளையாட்டுக்காரர்கள், கோமாளிகள், மிருகங்களின் சாகசங்கள் கொண்ட பெரிய பெரிய வண்ண ''கட் - அவுட்''கள் வைப்பது போலவே காந்தி, நேரு, இந்திரா, காமராஜ், ராஜீவ், மூப்பனார் ''கட் - அவுட்''கள் பூதாகரமாக நிறுத்தப்பட்டிருந்தன. அரங்கத்தின் எந்த மூலையில் இருந்தாலும் மேடை நிகழ்ச்சிகளை கண்டு ரசிக்க 200க்கும் மேற்பட்ட 'கலர் டி.வி'கள் பொருத்தப்பட்டிருந்தன. 22ந்தேதி காங்கிரசு காரியக் கமிட்டிக் கூட்டம். 23ந்தேதி காலையிலேயே மாநாடு துவங்கி விட்டது.

வெள்ளை வேட்டி, ஜிப்பா, கறுப்புக் கண்ணாடி கதர் குல்லாயுடன் வந்து கொடி ஏற்றி வைத்துத் துவக்கி வைத்தார் சர்க்கசின் நாயகன் ராஜீவ். உடனே கேளிக் கூத்து துவங்கிவிட்டது. மாநாட்டுப் பந்தலுக்கு வெளியே கொடியேற்றி வைத்து காங்கிரசு சேவாதளத் தொண்டர்களைப் பாராட்டி ராஜீவ் பேசத் துவங்கிய உடனே மாநாட்டுப் பந்தலுக்குள் ''ராஜீவ் வாழ்க!'', ''மூப்பனார் வாழ்க!'' என்று கூலிக்கு அழைத்து வரப்பட்ட கூட்டம் மாரடிக்கத் தொடங்கிவிட்டது. கையிலே ''வாக்கி - டாக்கி'' வைத்துக் கொண்டு திரிந்த மந்திரிகள் அடக்க முயன்ற போது கூட்டம் ''வந்தே மாதரம்!'' என்று கூச்சல் போட ஆரம்பித்துவிட்டது.

ஆத்திரமடைந்த மூப்பனார் அதட்டினார்; ஆத்திரத்தோடு முறைத்தார்; எதுவும் பலிக்கவில்லை. அதே சமயம் கலாச்சார இசை நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்றிருந்த சினிமா டைரக்டர் முக்தா சீனிவாசன், சினிமா இசை அமைப்பாளர் சந்திரபோசு, குமரி அனந்தன் ஆகியோர் தமது கச்சேரியைத் தொடங்கினார்கள். தேசியப் பாடல்க



தமிழகத்தில் காங்கிரஸ்: ஊதி ஊதிக் கிளப்பினாலும் உயரக் கிளம்பவில்லை கை(சின்னம்) பலூன்



படிப்பகம்

www.padippakam.com

ளைப் பாடி கூட்டத்தை ஈர்த்தனர். மந்திரிகள் அத்தனைபேரும் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நின்றனர். ஒரே சமயத்தில் இரண்டு காட்சிகள்; எங்கேதான் கவனம் செலுத்துவார்கள், ரசிகர்கள்?

இதையும் தொடர்ந்து நடந்த கண்கொள்ளாக் காட்சிகளையும் கண்டு ரசிக்க அன்று மக்கள் தான் கூடவில்லை. மூன்று லட்சம் பேருக்கு பந்தலும் உணவும் தயாராய் இருந்தன. வந்ததோ 15,000 பேர், அதிலும் பெரும்பான்மையினர் போலீஸ்காரர்கள். உணவு ஈ.மொய்த்து வீணாய் போனது. போலீசார் பந்தலிலேயே தாராளமாகப் படுத்து உருண்டனர். ஏழு மணிநேரம் இந்தியிலும் ஆங்கிலத்திலும் நடந்த,திண்டுகளில் சாய்ந்து கொண்டு தலைவர்கள் நடத்திய குசுகுசு பேச்சுக்கள், அங்கச் சேட்டைகள், எழுதி வைத்துப் படித்துப் பார்த்து ஒத்திகை பார்த்த சவடால் பேச்சுகள் சுவாரசியமாக இல்லாததால் .பந்தலில் பலரும் தூங்கிப் போனார்கள்.

கொடியேற்றிய பிறகு ராகுகாலம் என்பதால் ஒரு மணி நேரம் தாமதித்து மாநாடு தொடங்கியது. கொடியேற்றும் போது மட்டும் காந்தி குல்லாய் போட்டுக் கொண்டிருந்தார் ராஜீவ். அவரைப் பார்த்து ''குல்லாய் வியாபாரியும்குரங்குகளும்''கதையில் வருவதைப் போல மூப்பனாரும், சிதம்பரமும் கூட குல்லாய் போட்டுக் கொண்டு வந்தார்கள். பிறகு வியாபாரி குல்லாயைக் கழட்டியவுடன் குரங்குகளும் கழட்டி வீசியெறிந்தது போல குல்லாய்யை ராஜீவ் கழட்டியதும் அவரது பரிவாரங்களும் கழட்டி எறிந்து விட்டன. கதர்க் குல்லாய், கதர் பைஜாமா, ஜிப்பாவோடு விரல்களில் பெரியபெரிய மோதிரங்கள் மின்ன காங்கிரசுப் பிரமுகர்கள் பல்லிளித்துக் கொண்டு நின்ற போது இந்த சர்க்கசில் எல்லோருமே கோமாளிகள் தானோவென்று தோன்றியது. அதே ஒப்பனையோடு கறுப்புப் பூனைகள் ராஜீவைச் சுற்றிச் சுற்றி வந்தது இன்னும் வேடிக்கையாக இருந்தது.

முதல் நாள் காட்சிக்குப் போதிய ரசிகர்கள் கூடாதது குறித்து நிர்வாகிகள் பெரிதும் ஆத்திரமடைந்திருந்தனர். மாவட்டங்களில் இருந்து கும்பல் சேர்ப்பதற்காக 3000 பஸ் - லாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர். சென்னைக்கும் செங்கல்பட்டுக்கும் இடையே நாள் தோறும் ஐந்து சிறப்பு ரயில்கள் விட்டனர். சென்னையின் பல இடங்களில் இருந்தும் பல்லவன் போக்குவரத்து பஸ்கள் தனிச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டம் சேர்ப்பதற்காக பெருந் தொகையைக் காங்கிரசுப் பிரமுகர்களிடம் பிரித்துக் கொடுத்து இலக்குக் குறித்திருந்தனர். ஆனாலும் கூட்டம் சேரவில்லை.

காங்கிரஸ் தலைவர்களின் பேச்சை (அறுவையை) சகிக்க முடியாமல் வந்திருந்தவர்களும் சிறுசிறு கும்பலாக வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் சிதம்பரமும், குமரி அனந்தனும் கூட்டத்தை உள்ளே வரும்படி வருந்தி வருந்தி ஒலிபெருக்கியில் அழைத்துக் கொண்டே இருந்தனர். ''மக்களைத் தடுக்காதீர்கள், எல்லோரையும் உள்ளே விடுங்கள்!'' என்று போலீசாருக்கு உத்திரவு போட்டுக் கொண்டேயிருந்தனர். கூட்டம் இருந்தால் தானே உள்ளே வரமுடியும்!.

காங்கிரசின் சர்க்கசைக் காண மக்கள் திரளாமற் போனதற்கு காரணங்களைக் கண்டு பிடித்துச் சொன்னார், கேரள கருணாகரன். மறைமலை நகரில் சர்க்கஸ் முகாமிட்டதே தவறு; சென்னையிலும் அதன் புறநகரிலும் ஏற்கனவே பிரபலமான திராவிட சர்க்கஸ் (தி.மு.க) பார்த்துப் பழகிப் போனவர்கள். ஏமாளிகள் நிறைந்த திருச்சி அல்லது மதுரைப் பகுதியில் போய் சர்க்கஸ் முகாமிட்டிருக்க வேண்டும் என்கிற பாணியில் விளக்கமளித்தார்.

''மாநாட்டிற்கு தாராள அனுமதி இருக்காது, போலீஸ் கெடுபிடி அதிகமாக இருக்கும் என்ற கருத்தை எதிர்க்கட்சியினர் பரப்பிவிட்டனர்; மேலும் இரவு தங்குவதற்குப் போதிய ஏற்பாடு செய்வதைப் பற்றி நாங்கள் உறுதியாக இல்லை. எனவே இன்று வந்து கூடும்படி மக்களுக்கு நாங்கள் அழைப்பு விடவில்லை. இந்த பரந்த மைதானமே நிரம்பி வழியுமளவு ஜன சமுத்திரத்தை நாளை காணலாம். பக்கா — பெரிய — ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்று சர்க்கசின் பிரதான நிர்வாகி மூப்பனார் சொன்னார்.

இரவோடு இரவாக அந்த ஏற்பாடு நடந்தது. சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களுக்கு பல பஸ் - லாரிகள் விரட்டப்பட்டன. ஆள்திரட்டும் பிரமுகருக்கு 50 ரூ, மக்கள் தலைக்கு ரூ.20 வீதம் பெருந்தொகை விநியோகிக்கப்பட்டது. பண்ணை மூப்பனார் சொன்னபடி கூலிக்கு ஆள் திரட்டிக் காட்டினர்; அடுத்த நாள் பெருந்திரளைக் காட்டினார்.

காங்கிரசின் மாநாடு வெற்றி பெறுவதில் மத ஆச்சாரியார்களும் அக்கரை காட்டினர், காஞ்சி காமகோடி பீடம் பெரியவாள் சங்கராச்சாரி பொன்னாடை, புடவை, பிரசாதம் அனுப்பி வைத்தார். எதிர்கொண்டு போய் பயபக்தியோடு அவற்றைப் பெற்றுக் கொண்டார் ராஜீவ். அடுத்து காஞ்சி சங்கராச்சாரியோடு போட்டி போட்டுக் கொண்டு சிருங்கேரி சங்கராச்சாரி ராஜீவை ஆரத்தி எடுத்து திலகமிட்டு, பூரண கும்ப மரியாதை செய்து வரவேற்றார். ஏற்கனவே சிருங்கேரி பண்டாரத்துக்கும் பழங்களும், பொன்னாடையும், பூக்களும் ராஜீவ் அனுப்பியிருந்தார். பதிலுக்கு ராஜீவிற்கு ஒரு பொன்னாடையும் பிராசாதமும் வழங்கி இரகசிய தரிசனம் வேறு வழங்கினார் சிருங்கேரி பண்டாரம்.



குல்லாய் வியாபாரியைப் பார்த்து தொப்பி போட்டுக் கொண்ட மூப்பனார்

இந்துப் பண்டாரங்களுடன் போட்டியில் முந்திக் கொண்டார்கள் முஸ்லீம் பிரமுகர்கள். முதல்நாள் காங்கிரசு காரியக் கமிட்டிக் கூட்டத்துக்கிடையே ஒரு கும்பலோடு வெளியே வந்த ராஜீவை முஸ்லீம்



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு மருதைப் பிள்ளைகள்

இந்த மாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் ஒருவர் எல். மருதைப்பிள்ளை. பழைய உப்புச் சத்தியாகிரக ''தியாகி''. திருச்சிக்காரர். அவர் சொன்னார், ''இதற்குப் போக வேண்டாமென்று என் மகன்கள் தடுத்தனர். வேறுபாட்டை நேரில் நானே காண்பதற்காக போயே தீருவேன் என்று வந்தேன். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய தலைவர்கள் காங்கிரசில் இல்லை. தலைவர்கள் தேர்தலைப் பற்றியே சிந்திக்கிறார்கள். மக்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதுதான் பிரச்சினை'' என்று வேதனையுடன் செய்தியாளரிடம் கூறினார்.

உப்புச் சத்தியாகிரகியான இந்த எல். மருதைப்பிள்ளை போன்றவர்கள் விரக்தியடைந்தால் என்ன? பெரும் நிலப்பிரபுவும், சர்க்கரை ஆலை முதலாளிகள் சங்கத் தலைவரும் அருணா சுகர்ஸ் முதலாளியுமான வேறு ஒரு பெ. மருதைப்பிள்ளை இந்த மாநாடு வெற்றியடைய பத்திரிக்கைகளில் முழுப்பக்க விளம்பரம் கொடுத்துள்ளாரே! ''தமிழகத்திற்கு வருகை தரும் பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களே, தங்களை வருக! வருக!! என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்!'' என்கிறார் முதலாளி பெ. மருதைப்பிள்ளை! இது தான் காங்கிரசு சோசலிசம்!

எல். மருதைப்பிள்ளை



பெ. மருதைப்பிள்ளை



பிரமுகர்கள் வரவேற்று ஒரு கிண்ணம் கஞ்சி கொடுத்து ரம்ஜான் உண்ணாவிரதத்தை முடித்து வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். கஞ்சி குடித்த பிறகு ஒரு தட்டு கறி பிரியாணியும் பழரசமும் கொடுத்தனர். மறுத்தும் வலியுறுத்தியதால் ஒரு தேக்கரண்டி பிரியாணி சாப்பிட்டார். ஒரு தம்ளர் பழரசம் கொடுத்த போது அன்று மாலைக்குரிய அளவு பிரதமர் ஏற்கனவே உண்டுவிட்டார் என்று கூறி மெய்க் காவல் படையினர் தடுத்து விட்டனர்! இந்தக் கேளிக் கூத்துக்கு ஏற்பாடு செய்தது நீயா, நானா என்று தமிழக கப்பல் முதலாளி ஹாஜா செரிப்பும், மத்திய வக்ஃப் வாரிய உறுப்பினர் சலாமத்துல்லாவும் மோதிக் கொண்டனர்.!

பிரதமர் முன்னாடி தமது திறமைகளைக் காட்டும் பொருட்டு தமிழகக் காங்கிரசின் குட்டிக் கோமாளிகள் பல சேட்டைகள் செய்தனர்; ''ஜோக்'' அடித்து ரசிகர்களை மகிழ்வித்தனர். அவற்றில் சில:

''மீண்டும் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிப்பதற்காகத் தற்கொலைப் படை அமைப்போம்'' என இளைஞர் காங்கிரசுத் தலைவர் ஜெயமோகன் வீரசபதமேற்றார்.

''இரண்டு லட்சமாக இருந்த ஒரு எம்.எல்.ஏயின் விலை திராவிடக் கட்சிகளின் காலத்தில் தான் 25 லட்சமாக உயர்ந்து விட்டது'' என சுந்தரராஜன் எம்.பி. வருத்தம் தெரிவித்தார்.

''தமிழர்கள் பால் காங்கிரசு கொண்டுள்ள அக்கறையைக் கேள்வி கேட்க பெங்களூரில் இருந்து வந்த ஜெயலலிதாவுக்கோ, கேரளாவிலிருந்து வந்த ஜானகிக்கோ என்ன தகுதி இருக்கிறது'' என்று ஆணித்தரமாக கேட்டார், முன்பு அம்மணமாக டெல்லி வீதியில் ஓடிய தேசிய எம்.பி. குடந்தை ராமலிங்கம்.

''குறுகிய மொழி மற்றும் மாநில உணர்வுகள் தான் காங்கிரசின் முதல் எதிரி... இந்தியாவின் மற்ற பகுதிகளை விட தெற்கில் தான் மாநில உணர்வுகளில் இன்னும் அபாயம் உள்ளது. எனவே தெற்கில் இதை ஒழித்துக்கட்டப் பெரும் முயற்சியில் காங்கிரசு இறங்க வேண்டும்'' என்று குடந்தை ராமலிங்கத்துக்கு மாறாக தேசியத்தை வலியுறுத்தினார் மூப்பனார்.

''காங்கிரசுக்காரர்கள் தங்களது கட்சியை மறந்து விட்டார்கள்; பதவியிலும் அந்தஸ்திலும் தான் அவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளார்கள்'' என்று இப்போது தான் ஞானோதயம் பெற்றவராக உபதேசித்தார் கேரள கருணாகரன்.

குட்டிக் கோமாளிகளை எடுத்து விழுங்கும் வகையில் அமைந்தது தலைமைக் கோமாளி ராஜீவின் உரை. ராஜீவின் பீரங்கி பேர ஊழல்கள் ஆதாரபூர்வமாக அம்பலமான அதே தினத்தன்று, ''குற்றவாளிகளைத் தண்டிப்பது என்று அரசு உறுதி பூண்டுள்ளது'' என்று ஒரு ''ஜோக்''குடன் தொடங்கினார். ''இருண்ட சக்திகள் மீண்டும் தலைதூக்கி தனி நபர்களைத் தாக்குகின்றன. நமது ஜனநாயக நிறுவனங்களை சிறுமைப்படுத்த முயலுகின்றன. பலம் வாய்ந்த நமது நிறுவனங்கள் அவர்களின் தாக்கு தலை தாங்கிக் கொண்டன. எதிர்க்கட்சிகளிடம் சரக்கு இல்லை. சித்தாந்தம் இல்லை. 60, 70 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய வெளிநாட்டு புத்தகங்களைக் காப்பி அடிக்கிறார்கள், இடதுசாரிகள். அவர்கள் பிற்போக்குசக்திகளுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு சேருகிறார்கள். தேர்தலுக்காக அலைகிறார்கள்; அதிகாரத்தை இழந்ததால் விரக்தியிலுள்ளனர்'' என்று யோக்கிய சிகாமணி போல எதிர்க்கட்சிகளைச் சாடினார்.

வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியை காங்கிரசு அல்லாத அரசுகள் கவர்ச்சித் திட்டங்களுக்கு செலவழிக்கின்றன. மாவட்ட அளவுக்குத் திட்டமிட வேண்டும். நேரு பாணி சோசலிசமே சிறந்தது. அதற்கு மாறாக நேரு காலத்திலிருந்து எதிர்க்கட்சிகள் முன்வைத்த திட்டங்கள் தேசத்தை வெளிநாடுகளுக்கு விற்க கூடியவை. சொந்தக் காலில் நிற்க அனுமதிக்காதவை. ஜனநாயக நிறுவனங்களை உறுதிப்படுத்தவும் 'வறுமையை ஒழிப்போம், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம்' என்கிற முழக்கங்கள் பற்றியும் காங்கிரசுக்கு ஒரு தேசிய நோக்குண்டு'' என்று புளுகித் தள்ளினார்.

எதிர்க்கட்சிகளுக்கு எதிரான வசவில் காரம் குறைவாக இருப்பதாக முந்தின நாள் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் கோரியதற்காக பல சவடால்கள் சேர்க்கப்பட்டன. வெளிநாட்டு ஏகாதிபத்திய சுரண்டலுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் தேசதுரோகி, ஒடுக்கு முறைகளை அடுக்கடுக்காக கட்டவிழ்த்துவிடும் பாசிஸ்டு ராஜீவ், தேசிய சுயசார்பு, ஜனநாயகம் பற்றி பிரசங்கம் செய்கிறார்.

தாத்தா நேரு சோசலிச பாணி சமுதாயம் அமைப்பதாகச் சொன்னார், ஆத்தா இந்திரா வறுமையை ஒழிப்போம் என்றார். பாசிச பரம்பரை வாரிசு சொல்கிறது, ''வறுமையை ஒழிப்போம், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம்'' இப்படியே போனால் இந்திய மக்கள் அத்தனைபேரையும் ஒழிக்காமல் விட மாட்டார்கள்! இந்த கேலிக் கூத்தைக் கண்டு - கேட்டு கைதட்டி ஆரவாரம் செய்து ''ராஜீவ் வாழ்க'' என்று

படிப்பகம்

www.padippakam.com

கத்தும்படி கூட்டத்தினரை உசுப்பிவிட ரங்கராஜன் குமாரமங்கலமும் (தந்தை மோகன் குமாரமங்கலத்தின் துரோகத்திற்குப் பரிசாக வாரிசு உரிமை பெற்றவர்), வைஜயந்திமாலாவும் பலமுறை முயன்றனர். அவர்களது எத்தனிப்புகளுக்கு கூலிக்கு வந்த கூட்டம் இணங்க மறுத்து விட்டது.

இந்த சர்க்கசை காங்கிரஸ் ஏற்பாடு செய்த போது மேற்கொண்ட கெடுபிடிகள், அதிகாரமுறைகேடுகள், மேலும் இந்த கும்பலை அம்பலப்படுத்துவதாக, தமிழ்நாட்டில் தலையெடுக்கவே முடியாதபடி செய்து விட்டன. வீட்டு வசதி வாரியம், மின்வாரியம், குடிநீர் கழிவுநீர் வாரியம் போன்ற தமிழக அரசு நிறுவனங்களும் தொலைபேசி, வானொலி, வானொளி, நெடுஞ்சாலைத் துறை போன்ற மத்திய அரசு நிறுவனங்களும் முறைகேடாக பயன்படுத்தப்பட்டன. இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்த அடுத்த நாள் மாநாடு ஏற்பாடுகளுக்காக அரசுக்கு கட்சி நிதி தருவதாக ஒரு ஒப்பந்தம் போட்டனர்.

மறைமலை நகரின் வீட்டு வசதி வாரிய விதிகளுக்கு முரணாக இடமளித்ததோடு வீடு ஒதுக்கப்பட இருந்தவர்களை நிர்ப்பந்தித்து முன்தொகை வசூலித்தனர் அங்கு குடியிருப்போர்களுக்கு எதிராக ஆயுத சோதனைகள் நடத்தியும், அடையாள அட்டைகள் வழங்கியும், இளைஞர்களை ஊரை



எடுத் திக்கிலிருந்தும் மாண பயம்;
முழுவதும் போலீஸ் காவல்.

விட்டு வெளியேற்றியும் தொல்லைப்படுத்தினர். அந்த வட்டார பள்ளிகளில் ஒரு மாதத்திற்கு முன்பே தேர்வு வைத்து விடுமுறை விட்டு காங்கிரசு மாநாட்டிற்கு எடுத்துக் கொண்டார்கள். அதே போல திருமண மண்டபங்களை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். சென்னையிலிருந்து மறைமலை நகர் வரை வழியிலுள்ள குடிசைகள், கடைகளை இடித்துத் தள்ளினர். சென்னை - செங்கை போக்குவரத்திற்கு தடை விதித்தனர். பாதுகாப்பு ஏற்பாடு என்ற பெயரில் நாலு அடிக்கு ஒரு போலீசு என்று ஏரிகள், பாலங்கள், மலைகளிலும் நிறுத்தினர். மொத்தம் 10,000 தமிழக போலீசு, அது தவிர வெளிமாநிலங்களிலிருந்து இரகசிய போலீசார் குவிக்கப்பட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழகம் முழுவதும் பொதுவாக ஈழ ஆதரவு இளைஞர்களையும் குறிப்பாக கம்யூனிசப் புரட்சியாளர்களையும் ஏராளமாகக் கைது செய்தனர். போலிக் கம்யூனிஸ்டுகளையும் தி.மு.க., தி.க. இளைஞர்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

மொத்தத்தில், கூட்டத்தைக் கூட்டிக் காட்டி தமிழக மக்களை ஏய்த்து ஓட்டுப் பொறுக்க காங்கிரசு கோமாளிகள் செய்த முயற்சியில் தோற்றுப் போனது மட்டுமல்ல; இருந்த கொஞ்ச நஞ்ச ஆதரவையும் இழக்குமளவு வெறுப்பையே சம்பாதித்துக் கொண்டார்கள்.




## கொடுங்கோன்மைக்கு எதிராகக் கோதித்தெழுவோம்!

சென்னையில் ஏப்ரல் 22ம் தேதிமுதல் 24ம் தேதிவரை நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு ராஜீவ் வருவதையொட்டி தமிழகம் முழுவதும் அம்மணமான அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளது ஆளுநர் ஆட்சி. இலங்கையின் மீதான ராணுவ ஆக்கிரமிப்பும், பீரங்கி பேர ஊழலும் ஏற்கனவே அம்பலமாகி ஊர்சிரித்து போனவைதானென்றாலும், மாநாடு நடக்கும் நேரத்தில் தனக்கெதிராகத் தமிழகத்தில் ஒரு சிறிய முணுமுணுப்புக் கூட வந்து விடக் கூடாது என்பதனால் ஆயிரக்கணக்கான பேர்களை கைது செய்து சிறையிட்டிருக்கின்றனர் காங்கிரஸ் பாசிஸ்டுகள்.

22ம் தேதி மாநாட்டிற்கு அதீத முன்னெச்சரிக்கையுடன் 17ம் தேதி நள்ளிரவு முதலே கைது செய்யத் தொடங்கி விட்டது தமிழக போலீஸ் மதுரையைச் சேர்ந்த தோழர் மக்கள் நேசன், உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை பெற்று படுக்கையில் இருந்த போதும் கைது செய்யப்பட்டிருக்கிறார். மேலும் மதுரைக் கிளையில் தோழர் கணேஷ், தஞ்சைக் கிளையிலிருந்து தோழர் காளியப்பன், கோவையில் தோழர் நசீம் ஆகியோர் கைது செய்யப்பட்டு பொய் வழக்கின் கீழ் 15 நாட்கள் சிறையிலடைக்கப் பட்டுள்ளனர்.

18.4.88 இரவு 3 மணியளவில் கும்பலாக திருச்சி உறையூர் - பகுதியில் போலீஸ் நுழைந்து அடாவடித்தனம் செய்துள்ளது. திருச்சிக் கிளையைச் சேர்ந்த தோழர்கள் முத்து, கண்ணன், கபிலன், கோவன், ராஜா, ரவி, செல்வம், முத்து, சிங்காரம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தோழர் ஒருவரின் மனைவியை காவல் நிலையத்திற்கே கொண்டு சென்று மிரட்டியுள்ளனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணி திருவோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த தோழர்கள் இராம. துரைமாணிக்கம், குருமூர்த்தி ஆகியோரும் திருவையாறு ஒன்றியத்தைச் சார்ந்த தோழர் ஜெயசீலனும் சிறை வைக் கப்பட்டுள்ளனர்.

இவையன்றி முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் நயினாதுரை, கோவை, மதுரைப் பகுதிகளைச் சேர்ந்த புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் தோழர்கள், குடந்தை சிலிக்குயில் வெளியீட்டு நிறுவனத்தைச் சேர்ந்த தோழர் பொதிய வெற்பன் ஆகியோரும் கைது செய்து சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

புரட்சிகர அமைப்புகளைச் சார்ந்த தோழர்களை மட்டுமல்ல; இலங்கை மீதான ஆக்கிரமிப்பை எதிக்கும் பல்வேறு உதிரி அமைப்புகள் மற்றும் தனி நபர்கள், தி.மு.க. அ.தி.மு.க (ஜானகி பிரிவு) ஜனநாயக வாலிபர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த அணிகளும் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.


கைது நடவடிக்கையை எதிர்த்து ம.க.இ.க. தமிழகமெங்கும் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளது. சென்னை நகரெங்கும் போலீஸ் குவிக்கப்பட்ட நிலையிலும் ம.க.இ.க., சென்னைக்கிளை ராஜீவின் ஊழலையும், இலங்கை ஆக்கிரமிப்பையும் அம்பலப்படுத்தியும் மாநாட்டை எதிர்த்தும் நகரின் எல்லாப் பகுதிகளிலும் 4000 சுவரொட்டிகள் ஒட்டியுள்ளது.

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**தமிழ்நாடு.**

படிப்பகம்

www.padippakam.com

# பற்றி எரியும் பாரசீக வளைகுடா



மனித உயிர்கள் மலிவாகிப் போனது. ஈராக்கின் ரசாயன குண்டு வீச்சுக்குப் பலியான ஹாலப்ஜா நகர அப்பாவி மக்கள்.

கண்ணி வெடி மோதி எண்ணெய் கப்பல் தீப்பிடித்தது; ஈரானிய பீராங்கிப் படகு தாக்கி எண்ணெய் கப்பல் மாலுமிகள் சாவு; பாரசீக வளைகுடா பகுதியில் அமெரிக்க போர்க்கப்பல்கள் ஈரானியப் படகைத் தாக்கின போன்ற செய்திகள் நாள்தோறும் வருகின்றன. 1980 செப்டம்பர் தொடக்கம் நடக்கின்ற ஈரான் - ஈராக் யுத்தத்தின் தொடர்ச்சியாகவும் விளைவாகவும் மூண்டுள்ள பாரசீக வளைகுடா எண்ணெய் டேங்க் யுத்தத்தின் பின்னணி என்ன? அதன் சூர்த்திரதாரி யார்?

அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களுக்கும் ஆசிய ஆப்பிரிக்க கண்டங்களுக்கு நேர்வழி கடல் தடமான சூயஸ் கால்வாய் இந்தப் பகுதியில் தான் உள்ளது. இந்த வளைகுடா பகுதி எண்ணெய் மற்றும் எரிவாயு செல்வத்தில் மிகவும் வளமான பகுதியாகும். மேற்கு ஐரோப்பிய கண்டத்தின் மூன்றில் ஒரு பங்கு எண்ணெய் தேவையை, ஜப்பானின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் தேவையையும் இது பூர்த்தி செய்கின்றன. எனவே மிகவும் கேந்திரமான பகுதி குறிப்பாக, முழு உலகத்தையே ஆதிக்கம் செய்ய போட்டி போடும் ரசிய, அமெரிக்க வல்லரசுகளுக்கு யுத்த தந்திர ரீதியில் மிகமிக கேந்திர்மான பகுதி. மேலும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற ஈரான் ரசியாவின் தென்பகுதியை ஒட்டியிருக்கிற நாடு. ஈரான் மட்டும் ரசியாவின் செல்வாக்கில் விழுந்துவிட்டால் குறுகிய காலத்தில், தரை வழியாகவே ரசியப் படைகள் வளைகுடா கடல் பகுதியை அடைந்து விட முடியும். எனவே, அமெரிக்க, ரசியா இரண்டும் குறிப்பாக ஈரான் மீது குறி வைத்துள்ளன.

ஈரான் முன்பு அமெரிக்க ஏவல் நாயான மன்னர் ஷா என்பவனின் சர்வாதிகார ஆட்சிகீழ் இருந்தது. கொதித்தெழுந்த மக்கள் திரளின் போராட்டத்தினால், ஷா நாட்டை விட்டே ஓடினான். புரட்சிகர கட்சி மிக பலவீனமாக இருந்ததால், முஸ்லீம் மத வெறியை அடிப்படையாகக் கொண்ட ஆயதுல்லா கோமேனி என்ற மதத்தலைவர் மக்களின் எழுச்சியைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்தார்.

இஸ்லாத்தின் அடிப்படையிலான ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினார். இதற்குப் இஸ்லாமியப் 'புரட்சி' என பெயரிட்டுக் கொண்டார். அமெரிக்காவின் ஆதிக்கத்தை ஈரானிலிருந்து தூக்கி எறிந்தது மட்டுமல்ல, வேறு எந்த நாட்டிற்கும் அடிவருடியாக இருக்க மாட்டோம்; 'நா கர்பி, நா ஷர்கீ' என அதாவது 'மேற்குமில்லை, கிழக்குமில்லை' என ஈரான் பிரகடனப்படுத்தியுள்ளது. பிற்போக்குத்தனமான, நிலப் பிரபுத்துவ மத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகாரம் அங்கு நிலவினாலும் தேசிய உணர்வுடன் தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வருகிற சுதந்திர நாடாக ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை கொண்ட நாடாக ஈரான் இருக்கிறது. ஷியா என்ற முஸ்லீம் பிரிவைச் சேர்ந்த (சன்னி என்பது இன்னொரு பிரிவு) கோமேனி இஸ்லாமியப் புரட்சியை பிற முஸ்லிம் நாடுகளிலும் கொண்டு வருவேன் என பிரகடனம் செய்து வருகிறார். மதவெறி சக்திகளை பிற நாடுகளில் தூண்டி, மறைமுகமாக உதவி வருகிறார்.

ஈராக் நாட்டு மக்களில் பெரும்பாலோர் ஷியா பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள். ஈராக் ஜனாதிபதி சத்தம் ஹுசேனைத் தூக்யெறியுமாறு இம்மக்களுக்கு ஈரானின் கோமேனி பகிரங்கமாகவே அறைகூவல் விட்டு வருகிறார். 'ஷியா பிரிவு முஸ்லிம்கள் தான் மதக் கோட்பாடுகளை புனிதமாக எண்ணி, வழுவாது கடைப்பிடித்து வருபவர்கள்; எனவே உயர்ந்தவர்கள்' என்று உசுப்பி வருகிறார். பிற அரபு நாடுகளின் ஆட்சியாளர்களில் பெரும்பாலோர் பிற்போக்கு மன்னர் பரம்பரை சர்வாதிகாரிகளாவர். மோசமான அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகியுள்ள அந்நாட்டு இளைஞர்களுக்கு கோமேனியின் இஸ்லாமியப் புரட்சி பேஷனாக தெரிகிறது. எனவே, பிற அரபு நாடுகள் கோமேனியை வீழ்த்த முயலுகின்றன. மேலும் அவைகள் அமெரிக்க ஆதரவு நாடுகள்; தனது ஆதிக்கத்திற்கு தடை விதிக்கும் ஈரானிய கோமேனி ஆட்சியை தூக்கியெறிவும் இந்நாடுகளை அமெரிக்கா பயன்படுத்துகிறது; குறிப்பாக சவூதி அரேபியாவும் குவைத்தும் ஈராக்கிற்கு பணமும் ஆயுதமும் கொடுத்து உதவுகின்றன.

ஈராக்கில் சத்தம் ஹுசைன் என்ற இராணுவ சர்வாதிகாரியின் ஆட்சி நடக்கிறது. ஏறத்தாழ எல்லா அரபுநாடுகளும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் இவருக்கு உதவுகின்றன. ரசிய வல்லரசு இந்த நாட்டிற்கும் ஈரானுக்கும் ஒரே சமயத்தில் ஆயுத சப்ளை செய்து வருகின்றது. சீனாவும் ஆயுதம் கொடுக்கிறது.

இதுதான் பின்னணி; எனினும் வளைகுடா பகுதி பற்றியெரிய முதல் நெருப்பு வைத்தது யார்?

அமெரிக்க வல்லரசுதான்! ஈரானிய ஆட்சியாளர்களை எவ்வகையிலாவது பணிய வைக்க வேண்டும் என்பதற்காக ஈராக்கைத் தூண்டி யுத்தத்தை ஆரம்பித்து வைத்தது அமெரிக்க வல்லரசு தான். பல ஐ.நா தீர்மானங்களும் தனிநபர் தீர்மானங்களும் யுத்தத்தை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டன. 'யுத்தத்தைத் தொடங்கிய தவறைச் செய்து விட்டேன் என்று ஈராக் பகிரங்கமாக ஒப்புக் கொண்டாலொழிய, யுத்தத்தை நிறுத்த முடியாது; கிரிமினல் குற்றவாளியோடு சமாதானம் என்பது இஸ்லாத்திற்கு எதிரானது' என்று கோமேனி 1982ல் அறிவித்து விட்டார்.

மதவெறியூட்டப்பட்ட, பெரும்பாலும் இளைஞர்களைக் கொண்ட ஈரான் ராணுவம் வெற்றி பெறும்நிலை ஏற்பட்டது. தோல்வியைத் தடுக்க ஈரானின் எண்ணெய் கப்பல்களையும் கார்க் தீவில் உள்ள ஈரானின் எண்ணெய் குழாய் முனையையும் ஈராக் தாக்கியது. இதனால் எண்ணெய்மூலம் ஈரானுக்கு கிடைக்கும் வருவாய் தடைபடும். தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான்

படிப்பகம்

www.padippakam.com

தனது ஆதரவு நாடுகளின் எண்ணெய் கப்பல்களைத் தாக்கும்; அதன் மூலம் யுத்த முனை விரிவாவதோடு தன்னைத் தூண்டி விட்டு ஆதரவு அளிக்கும் அரபு நாடுகளும் அமெரிக்காவும் யுத்தத்தில் பங்கேற்க வேண்டி வரும்; இதன் விளைவாக தனது தோல்வியைத் தடுத்து விடலாம் என்று ஈராக் எண்ணியது. ஈரானை மிரட்டி பணிய வைக்கவும் எண்ணெய் கப்பல்களுக்கு பாது காப்பு கொடுப்பது என்ற சாக்கில் வளை குடா பிராந்தியத்தில் தனது படைகளைக் கொண்டு வந்து குவிக்கவும் அமெரிக்கா இந்த திட்டத்திற்கு ஊக்கம் கொடுத்தது.

ஈரான் திருப்பித் தாக்கியது; குறிப்பாக ஈராக்கின் தீவிர ஆதரவு நாடுகளான குவைத், சவூதி அரேபியா ஆகியவைகளின் எண்ணெய் கப்பல்களை குறிவைத்து தாக்கியது;வளைகுடாவின் ஒரு பக்கம் முழுவதும் கடற்கரையைக் கொண்டுள்ள ஈரான் கண்ணிவெடிகளை கடலில் மிதக்க விட்டது; எந்த முனையில் வந்தாலும் சும்மா விட மாட்டோம் என சவால் விடுத்தது ஈரான்.

எதிர்பார்த்தவாறு அமெரிக்க, ரசிய வல்லரசுகள் தலையிட்டன. ரசியா மூன்று எண்ணெய் டாங்கிகளை குவைத்துக்கு வாடகைக்கு விட்டு, அவைகளுக்கு பாது காப்பு தேவை என்ற முகாந்திரத்தில் யுத்த கப்பல்களை அனுப்பியது. தனது கொடியை தாங்கிக் கொண்டு செல்ல 11குவைத் கப்பல்களுக்கு அமெரிக்கா அனுமதி அளித்தது. சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு பாதுகாப்பு கொடுக்கிறோம் என்ற முகாந்திரத்தில் அமெரிக்கா தனது கடற்படையை அனுப்பி வைத்தது. 'பாரசீக வளைகுடா பகுதியில் ரசியாவின் செல்வாக்கு விரிவடைவதைத் தடுக்கவும்' தனது படையை அனுப்பியதாகவும் அமெரிக்கா கூறியது.

தனது உள்நாட்டு நிலைமை காரணமாக உலக அளவில், போர்த்தந்திர தற்காப்பு நிலையை ரசியா எடுத்துள்ளதால், வளைகுடா பகுதியிலும் அந்த நிலையையே எடுத்துள்ளது. ஐ.நா. சபையின் சார்பிலான மத்யஸ்தப் படை ஒன்றை வளைகுடா பகுதியில் நிறுத்தலாம்; அதன் மூலம் எண்ணெய் டேங்க் யுத்தத்தை நிறுத்தி கப்பல் போக்குவரத்திற்கு பாதுகாப்பு கொடுக்கலாம் என ஆலோசனை கூறியது; ஆனால், அமெரிக்கா இதை நிராகரித்து, ரசியாவை விட அதிகமான படைகளை குவித்துள்ளது. 29 யுத்த கப்பல்கள், 14 ஆதரவு கப்பல்கள் 24000 துருப்புகள் ஆகியவற்றைக் குவித்துள்ளது.

தனது கூட்டாளிகளான மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளையும் பங்கு கொள்ளுமாறு அமெரிக்கா அழைத்தது முதலில் ஒத்துழைக்க மறுத்து பின்னர் அமெரிக்காவால் நெருக்கப்பட்டு யுத்த கப்பல்களை அவை அனுப்பின. அமெரிக்காவின் எல்லா மேலாதிக்க நடவடிக்கைகளுக்கும் இரண்டாம் உலக நாடுகள் எனப்படும் இந்நாடுகள் ஒத்துழைக்கவில்லை; எதிர்ப்பு இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

இதற்கிடையே ஐ.நா. அவையில் 598வது எண் கொண்ட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படி, 'இருநாடுகளும் யுத்தத்தை உடனே நிறுத்த வேண்டும்; சர்வதேச எல்லைகளுக்கு இருநாட்டுப் படைகளும் திரும்பிச் செல்ல வேண்டும்; யுத்தத்தை தொடங்கியதற்கு யார் பொறுப்பாளி எனக் கண்டறிய ஒரு பாரபட்சற்ற குழு அமைக்கப்படும்' என்ற அம்சங்களை அத்தீர்மானம் கொண்டிருந்தது. ஈராக்கிற்கு சாதகமான தீர்மானமே இது. ஆனால் யுத்தத்தைத் தொடங்கிய குற்றவாளி யார் என முதலில் அறிவிக்காமல் எந்த சமாதானத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது என ஈரான் திட்டவட்டமாக சொல்லி விட்டது. 'முதலில் ஒரு பாரபட்சமற்ற குழு அமைக்கப்பட்டு குற்றவாளி யார் என தீர்மானிக்கட்டும்; அதன்பின் யோசிக்கிறோம்; வேண்டுமானால் அதுவரை அதிகார பூர்வ ஒப்பந்தம் இல்லாமல் யுத்த நிறுத்தம் செய்கிறோம்' என ஈரான் சொல்லி விட்டது. ஈராக்கும் இத்தீர்மானத்தை ஒத்துக் கொள்ள மறுத்தது. மாறாக 598—வது தீர்மானத்தில் கண்டுள்ளபடி ஈரானுக்கு ஆயுதங்களை விற்க தடை செய்யும் பிரிவை உடனே அமுல் படுத்த வேண்டுமென வற்புறுத்தியது. அரபு நாடுகள் ஈரான் வெற்றி பெறுவதை அறவே விரும்பவில்லை. அதே சமயம், யுத்தத்தை நிறுத்த தாங்கள் எடுக்கும் முயற்சி வெற்றி பெறும்போது அது ஈராக்கின் தூதரக விவேகத்திற்கு கிடைத்த வெற்றி போல சித்தரிக்கப்பட்டு விடக் கூடாது என் பதிலும் குறியாக இருந்தன.

ஆப்கானிஸ்தான் ஒப்பந்தம் தொடர்பாக தனக்கு தொல்லை கொடுக்காமல் இருந்தால் ஆயுத தடை தீர்மானத்தை எதிர்த்து வோட்டு போடுவதென எழுதாத ஒப்பந்தம் ஒன்றை ஈரானுடன் ரசியா போட்டுக் கொண்டது. அதுமட்டுமல்ல, இரு தரப்பினருக்கும் ஆயுத சப்ளை செய்து கொள்ளையடிக்கிறது. இதன் மூலம் தான் ஒரு வல்லரசு தான், சாவு வியாபாரி தான் என்பதை ரசியா நிரூபித்துக் கொண்டுள்ளது.



# ஈரான்: பழமை பர்தா நீங்கவில்லை- ஆயுதப்பயிற்சிக்கு மட்டும் சுதந்திரமா?

தங்களது நலன்களைக் காத்துக் கொள்ள தன்னை நட்டாற்றில் விட்ட அரபு நாடுகளையும் அமெரிக்காவையும் கண்டு ஈராக் ஆத்திரமுற்றது. யுத்தத்தை வேறு பரிமாணத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீது இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 29ம் தேதி ஏவுகணை வீசித் தாக்கியது. யுத்தம் தொடங்கியதிலிருந்த இதுதான் முதல் தடவையாக நடந்தாகும். தன்னுடைய நாட்டு சாதாரண சிவிலியன்கள் வசிக்கும் பகுதிகளை ஈரான் தாக்கிக் கொல்வதால், பதிலுக்கு தானும் இவ்வாறு செய்வதாக ஈராக் இந்த சிவிலியன் படுகொலைக்கு நியாயம் கற்பித்தது. ஈரானும் ஏவுகணை கொண்டு திருப்பித் தாக்கியது. இரு தரப்பிலும் ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டனர்; சொத்துகள் நாசமாயின; மக்கள் உயிரைப் பிடித்துக் கொண்டு அலைந்தனர். இவ்வாறு யுத்தம் 'நகரங்கள் மீதான யுத்தமாக'மாறியது.

இதனாலும் தனது நோக்கத்தை அடையாத ஈராக் அடுத்த கட்டமாக இரசாயன குண்டை முதன் முறையாக வீசியுள்ளது. ஈரான் பிடித்திருந்த ஈராக்கின் பகுதியான

படிப்பகம்

www.padippakam.com

ஹாலப்ஜா மீதுதான் இந்த குண்டை ஈராக் வீசியது. ஏறத்தாழ 5000 மக்கள் கொல்லப்பட்டதாக ஈரான் கூறுகிறது.

ஈரான் தொடர்ந்து போரிடுகிறது. கண்ணி வெடிகளை வைத்து கப்பல்களைத் தகர்ப்பது, பீரங்கிப்படகுகள் விட்டு ஈராக் ஆதரவு எண்ணெய் கலங்களைத் தாக்குவது ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறது.

ஏப்ரல் மத்தியில், ஈரானின் இரண்டு எண்ணெய் துரப்பண மேடைகளை அமெரிக்கா குண்டு வீசித் தாக்கியது. கண்ணி வெடிகளை வைக்கும் படகுகள் அங்கிருந்து வருவதால் தான் தாக்கினோம் என அமெரிக்கா சொல்லியது. பதிலடியாக அமெரிக்க கப்பல் ஒன்றை ஈரான் தாக்கியது. 'எங்களது கொடிகளைத் தாங்கி வருகின்ற கலங்களை ஈரான் தாக்கினால் சரியான தண்டனை கொடுப்போம்; எண்ணெய் டேங்குகளுக்கு யார் பாதுகாப்பு கேட்டாலும் கொடுப்போம்; கண்ணி வெடிகளை தொடர்ந்து அகற்றுவோம்; கண்ணிவெடி வைப்பவர்களைப் பார்த்தால் அழிப்போம்' என அமெரிக்கா கொக்கரிக்கிறது. வளைகுடா பகுதியில் பேட்டை ரவுடி போல அமெரிக்கா நடந்து கொள்கிறது. 'எங்களைத் தாக்கினால் திருப்பித் தாக்குவோம்; நேரடி மோதலுக்கு தயார்; வளைகுடா பகுதியின் விதியை வளைகுடா நாடுகள்தான் தீர்மானிக்க வேண்டும்; அன்னியர்கள் அனைவரும் வெளியேறுங்கள்!' என ஈரான் பிரகடனம் செய்துள்ளது. அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவ அதிகாரிகள், தூதர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் போன்றவர்களை பிறநாடுகளில், குறிப்பாக லெபனானில் உள்ள தனது ஆதரவு மதவெறி சக்திகளை வைத்து கடத்திச் சென்று பிணையமாக வைத்து பதிலடிக் கொடுக்கிறது.

இவைகளின் விளைவாக, வளைகுடா பகுதியில் பதற்ற நிலை நிலவுகிறது. எந்த நேரமும் அது அமெரிக்கா நேரடியாக ஈடுபடும் யுத்தமாக வெடிக்கலாம்.

'ஏகாதிபத்தியங்கள் இருக்கும் வரை யுத்தங்களும் இருக்கும்' என லெனின் சொல்லியுள்ளார். மேலாதிக்கம், காலனியாதிக்கம் செய்யவும் ஆயுத தளவாட விற்பனைக்காகவும் யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடும் ஏகாதிபத்தியங்களை ஒழிக்காதவரை பகுதி அளவிலான யுத்தங்களை கூட ஒழிக்க முடியாது. வளைகுடா பகுதியின் வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கும் உரிமை எங்களுக்கு மட்டுமே உண்டு என வளைகுடா நாட்டு மக்கள் பிரகடனம் செய்ய வேண்டும். வல்லரசுகளை விரட்டியடிக்க வேண்டும்; தத்தம் நாடுகளில் உள்ள மன்னர் பரம்பரை மதத்தலைவர் சர்வாதிகார— இராணுவசர்வாதிகார ஆட்சிகளை ஓர் ஆயுதத்தாங்கிய போராட்டத்தின் மூலம் தூக்கியெறிய வேண்டும். தேசிய சுதந்திரத்தையும் தேசிய இறையாண்மையையும் உயர்த்தி பிடிக்க வேண்டும். சர்வதேச உழைக்கும் வர்க்கத்தினருடன் ஐக்கியம் கட்ட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மத விலங்குகளை உடைத்தெறிந்து மார்க்சிய லெனிய மாசேதுங் சிந்தனையை தங்களது உலக கண்ணோட்டமாக கொள்ள வேண்டும்.

**வண்டார் குழலி மணாளன்**

# சிறைக்கொடுமையும் சினந்தெழும் ஜனநாயக சக்திகளும்



கூடலூர் மத்திய சிறைச்சாலை, தென்னாற்க்காடு மாவட்டத் தலைநகர் கடலூரில் கேப்பர் குவாரி மலையில் அமைந்துள்ள ஒரு சித்திரவதைக் கூடாரம். உரிமைகளுக்காக குரல் கொடுக்கும், பல்வேறு மாவட்டச் சிறைச்சாலைகளில் உள்ள முன்னோடி சிறைக் கைதிகளை இழுத்துவந்து சித்திரவதைச் செய்ய, தனிமைப்படுத்தி அடைத்து வைக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் 'தனிச்சிறப்பான புனரமைப்பு மையம்'.

இதன்ஊழல் நிறைந்த சிறை நிர்வாகத்தை எதிர்த்தும், கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து, இங்குள்ள ஆயுட் தண்டனைச் சிறைக்கைதிகள், கடந்த பிப்ரவரி மாதம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கினர். ஆயுட் கைதிகளின் உறுதிமிக்க இப்போராட்டம் 12 நாட்களுக்கு மேல் நீடித்தது. போராட்டக்காரர்கள் ஆபத்தான நிலையில் கடலூர் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அம்பலப்பட்ட நிர்வாகம், இதன் பின்னர் சிறைக்கைதிகளின் மேல், மேலும் வெறித்தனமாக பாய்ந்தது. போராட்டத்தில் முன்னணியில் நின்ற காரணத்திற்காக கவிஞர் தமிழிந்தியன் என்ற ஆயுட் தண்டனைச் சிறைக்கைதி மிருகத்தனமாக தாக்கப்பட்டு தனிக் கொட்டடியில் அடைக்கப்பட்டார். அதே சிறையில், ஆயுட்தண்டனைச் சிறைக்கைதியாக இருக்கும் அவரது சகோதரரைக் கூட சந்திக்க விடவில்லை சிறை நிர்வாகம்.

ஏற்கனவே, தங்களுடன் சிறையில் பழகிய புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் மாநில அமைப்பாளரான தோழர் கல்யாணிக்கு சிறைக் கொடுமையை கடிதம் மூலம் தெரிவித்தார், தமிழிந்தியன் சகோதரரான ஆறுமுகம். திண்டிவனம் அரசினர் கலைக்கல்லூரியில் பேராசிரியராக பணிபுரியும் தோழர் கல்யாணி இச் செய்தியை கல்லூரி ஆசிரியர் சங்கத்திற்கு (AIFUCTO) தெரியப்படுத்தி அவர்களது ஆதரவினைக் கோரினார். சிறைக் கைதிகளுக்கு உதவ கல்லூரி ஆசிரியர் சங்கம் ஆர்வத்தோடு முன் வந்தது. அச்சங்க முன்னோடிகளும் தோழர் கல்யாணியும் சென்னை உயர்நீதி மன்ற இலவச சட்ட ஆலோசகத்துறைச் செயலரிடம் சிறைக் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை முறையிட்டனர்.

கைதிகளின் உண்மை நிலவரம் கண்டறிய சென்னை உயர்நீதி மன்ற இலவச சட்ட ஆலோசகத் துறையின் முயற்சிக்கும் ஒத்துழைக்கவில்லை, சிறை நிர்வாகம். இலவச சட்ட ஆலோசகத் துறையும் அதற்கு மேல் கண்டு கொள்ளவில்லை. உண்மை நிலவரம் கண்டுவர பணிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் கைதிகளைச் சந்திக்க அனுமதிக்கப்படாதது கண்டு கொதித்தெழுந்தனர்.

சிறை அதிகாரிகளின் இந்தத் திமிர்த்தனமான போக்கை எதிர்த்தும் ஆயுட் தண்டனைக் கைதிகளுக்கு உதவவும் ஆக்க பூர்வமான முடிவுகளை எடுக்க வழக்கறிஞர் தேவநாதன் (கைதிகளின் உண்மை நிலவரம் காணச் சென்ற இரு வழக்கறிஞர்களில் ஒருவர், இன்னொருவர் வழக்கறிஞர் ஆர். நடராஜன்) பல்வேறு அமைப்புகளுக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், ஜனநாயக உணர்வுள்ளவர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இதன் அடிப்படையில் 30க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட கூட்ட முடிவில், கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை உள்ளடக்கி 'மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம்' என்ற பெயரில் ஒரு இயக்கத்தை உருவாக்கவும், இவ்வியக்கத்தின் சார்பில் பொதுவில் மக்கள் மீது நடைபெறும் அநீதிகள் அடக்கு முறைகளை எதிர்த்து குரல் கொடுக்கவும், குறிப்பாக உடனடியாக கடலூர் மத்திய சிறைக் கைதிகள் மீதான அடக்குமுறையை எதிர்த்தும் கவிஞர் தமிழிந்தியனுக்கு வைத்திய சிகிச்சை கிடைக்கவும் - நீதி கிடைக்கவும் இயக்கமெடுக்க முடிவெடுக்கப்பட்டது. 15 பேர் கொண்ட செயல் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு - கடலூர் மத்தியச்சிறையில் கைதிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து பொதுக் கூட்டம் நடத்தவும் முடிவெடுக்கப்பட்டது.

சரியான இலக்கு நோக்கி வைக்கப்பட்டுள்ள இம்முதல் அடியிலிருந்து சரியான உலக கண்ணோட்டத்துடன் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் போராட அர்ப்பணித்து கொள்ளும் போது இவ்வமைப்பின் லட்சியம் நிச்சயம் ஈடேறும்.

தகவல்: மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு, கடலூர்கிளை.

படிப்பகம்

www.padippakam.com

# அசாம் போலீசின் அக்கிரமம்



குடித்துவிட்டு கும்மாளமிட்டுக் கொண்டு கும்பலாகக் கற்பழிப்பது என்பது போலீஸாரின் பொதுக் கலாச்சாரமாக நாடெங்கும் வேகமாகப் பரவி வருகிறது. ஏறத்தாழ ஓராண்டுக்கு முன் கேரளத்தில் தங்கமணி கிராமத்தில் போலீசார் வீடு புகுந்து சூறையாடி பெண்களைக் கற்பழித்தனர். கடந்த பிப்ரவரியில் பீகாரின் பராரியா கிராமத்தில் நள்ளிரவில் சூறையாடி பெண்களைக் கற்பழித்தனர். இச்சம்பவத்துக்கு 16 நாட்களுக்கு முன்னர் இதே போன்ற கற்பழிப்பும் சூறையாடலும் அசாமின் பும்கா கிராமத்தில் நடந்துள்ளது.

அசாமில் காடுகளைச் சூழ்ந்த பகுதியைக் கொண்டது கோக்ராஜ்கர் மாவட்டம். இங்கு பாடோ பழங்குடியினர் உதயாச்சல் இயக்கம்' என்ற பெயரில் தங்கள் உரிமைக்காகவும் தனி நாடு கோரியும் போராடி வருகின்றனர். அவர்களை வேட்டையாட அசாம் போலீஸ் அதிரடிப் படை அடிக்கடி கிராமங்களுக்குப் படையெடுப்பது வழக்கம். குறிப்பாக பும்கா .கிராமம் போராளிகளின் புகலிடமாகவும் மறுபுறம் போதை மருந்து கடத்தல்காரர்களின் மையமாகவும் இருப்பதால் இக்கிராமத்தை அடிக்கடி சூறையாடுவதென்பது அதிரடி போலீஸ் படையின் மாமூல் வேலை. இப்படித்தான் ஜனவரி 25ந் தேதியன்று நள்ளிரவில் இப்படையின் 4வது பட்டாலியனைச் சேர்ந்த ஒரு பிளாட்டூன் (ஏறத்தாழ 50 பேர்) பும்கா கிராமத்தைச் சூறையாடக் கிளம்பியது.

வழக்கமாக கிராமத் தலைவர் வீட்டுக்கு வந்து அன்னியர்கள் யாரேனும் ஊருக்கு வந்தார்களா என்று போலீஸ் கும்பல் விசாரித்து துன்புறுத்துவது அதன் வாடிக்கை. இத்தொல்லையிலிருந்து தப்பிக்க கிராமத் தலைவரும் ஊரிலிருந்த ஆண்களும் போலீஸ் வரப் போகும் செய்தியை அறிந்து தப்பியோடி விட்டனர். சூறையாட வந்த போலீஸ் கும்பலைத் தடுப்பதற்கு யாருமில்லாமல் போகவே கும்மாளமிட்டுக் கொண்டு தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. ஒரு கும்பல் அப்பாவி பழங்குடி மக்களின் அற்ப உடைமைகளைச் சூறையாடிக் கொண்டிருந்த போது, மற்றொரு கும்பல் இளம் பெண்களின் கற்பைச் சூறையாடியது.

அவமானத்தாலும் பீதியாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சம்பவத்தை வெளியே சொல்லாததையும் ஊரில் ஆண்கள் யாருமில்லாததையும் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் ஜனவரி 27 அன்று - அடுத்த 48 மணி நேரத்தில் அதே கிராமத்தை போலீசு கும்பல் முற்றுகையிட்டது. ஜனவரி 26 அன்று 'குடியரசு' தினம் என்பதால் அன்று தேசநலன் கருதி இக்கும்பல் அடங்கிக் கிடந்தது போலும்! மீண்டும் சூறையாடலும் கற்பழிப்பும் தொடர்ந்தது. குறைந்தது ஏழு பெண்களை கும்பலாகச் சேர்ந்து கற்பழித்தனர். அத்தனை நபரும் 12 லிருந்து 17 வயதுக்குட்பட்ட இளம் பெண்கள். இதுதவிர பல பெண்களை நிர்வாணப்படுத்தி ரசித்தனர். கண்ணெதிரே தன் மகள் கற்பழிக்கப்படுவதைத் தடுக்கப் போன ஒரு தாய் கடுமையாக துப்பாக்கியால் தாக்கப்பட்டார்.

இக்கோரச்சம்பவம் பற்றி அரசும் போலீசும் திட்டமிட்டே மூடிமறைத்துவிட்ட நிலையில், அசாம் மகளிர் நல அமைப்பினர் இக்கிராமத்திற்குச் சென்று தகவல்களைத் திரட்டி அம்பலப்படுத்தத் துவங்கினர். அதைத் தொடர்ந்து பல்வேறு பழங்குடி மாணவர்— மகளிர் அமைப்புகள் தொடர்ச்சியாக ஆர்பாட்டம் செய்யத் துவங்கியதும் அரண்டுபோன அரசு விசாரணைக்கு உத்தரவிட்டது. விசாரணையில் அதிரடிப் படையின் உதவிசப் இன்ஸ்பெக்டர், பொறுப்பு அதிகாரி உள்ளிட்ட 9 போலீசார் மீது குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

அதே நேரத்தில் ராஜஸ்தான் உயர்நீதி மன்ற நீதிபதியான லோடா, அசாம் உயர்நீதி மன்றத்திற்கு மாற்றலாகி வந்தார். ராஜஸ்தானில் உடன்கட்டை ஏற்றிய சதிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி புகழ்பெற்ற இவர் பொறுப்பேற்றதும் முதல் வேலையாக, மீண்டும் உயர்மட்ட விசாரணை நடத்தி, போலீஸார் மீது பகிரங்க குற்றம் சாட்டி கைது செய்ய உத்திரவிட்டார். அதோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரு.25,000 நிவாரணத் தொகை அளிக்கக் கோரினார்.

'பரவாயில்லையே! கேரளத்தின் தங்கமணி கிராமத்திலும் பீகாரின் பராரியா கிராமத்திலும் கற்பழிப்பை சூறையாடலில் ஈடுபட்ட போலீசார் விசாரணையில் தண்டிக்கப்பட்டதைப் போல, இப்போது பும்கா கிராமத்தில் நடந்த சம்பவங்களுக்காக போலீசார் தண்டிக்கப்படுவது நல்ல அறிகுறி!' என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் பெருமிதம் கொள்கிறார்கள். ஆனால் போலீசாரின் பொதுக் கலாச்சாரமாகிவிட்ட கற்பழிப்பை ஒழிப்பது பற்றி அவர்கள் வாயே திறப்பதில்லை. அது காக்கிச் சட்டையுடன் ஒட்டிப் பிறந்த கயவாளித்தனம்! அது தேசிய அவமானம்! சட்டபூர்வ சமூக விரோதக் கும்பலான போலீசையும் ராணுவத்தையும் ஒழிக்காத வரை இந்த அவமானக் கறையை நீதி மன்றத் தீர்ப்புகளால் கழுவி விட முடியாது. ஆந்திராவின் அடிலாபாத் ஆதிவாசிகளைப் போல, அசாமின் பாடோ பழங்குடி மக்களும் புரட்சியாளர்களின் தலைமையில் அணிதிரளுவார்கள். இந்த தேசிய அவமானத்திற்குப் பழிவாங்கியே தீருவார்கள்.

**மணி**

# செங்கொடி காட்டிப் பிழைக்கின்றார்! சில சில்லரைக்காக நடிக்கின்றார்!

கேரளாவைப் பார்... கேரளாவைப்பார்... எங்கும் எப்பொழுதும் வோட்டுப் பொறுக்குவதற்காக வலது, இடது போலிக் கம்யூனிஸ்டு கட்சியினர் வைக்கும் ஒப்பாரி.

அண்மையில் கேரளா சென்றிருந்த நான், பார்த்ததைக் கூறுகிறேன்.

கேரள மாநிலம், பத்திரதிட்டா மாவட்டம்; சித்தோடு என்னும் ஊரில் கக்காடு நீர்மின் திட்டதிற்கான அரங்க வேலை நடந்து கொண்டிருக்கிறது. கேரள மின் வாரியம் எல்லா வேலைகளையும் காண்ட்ராக்டுக்கு விட்டுள்ளது. காண்ட்ராக்ட்காரர்களுக்கெல்லாம் தலைமை வகிப்பவன் பைலிப்பிள்ளை என்ற இந்திரா காங்கிரசின் செல்லப்பிள்ளை; மிகவும் திமிர் பிடித்தவன்.

ஏறத்தாழ 2000 காண்ட்ராக்ட் தொழிலாளர்களும் ஒரே சங்கமாக சி.ஐ.டி.யுவின் உறுப்பினர்கள். ஒரே சங்கம் என்ற வலிமை இருந்தும், தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்ற போராடாமல், வாய்ப்பந்தல் போட்டுக் கொண்டு பைலிப்பிள்ளை கம்பனியை வளைய வளைய சுற்றி மட்டுமே வந்தது.

ஆத்திரமடைந்த 80 தொழிலாளர்கள் (பைலிப்பிள்ளை கம்பனியைச் சேர்ந்த ஒரு பிரிவு தொழிலாளர்கள்) அரைகுறையாக வேலையை முடித்து வைப்பது என்ற போராட்டத்தை தாங்களாகவே மேற்கொண்டனர். வேறு வழியின்றி பேச்சு வார்த்தைக்கு அழைத்த கம்பனி, போராட்டத்தின் முன்னணியில் நின்ற நான்கு தொழிலாளர்களை வீட்டிற்கனுப்ப ஒப்புக் கொண்டால், கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக சொல்லிற்று. என்ன எலும்புத்துண்டு வீசப்பட்டதோ தெரியவில்லை, சிஐடியு சங்க செயலாளர் பி.ஆர். வித்யாதரன் இதற்கு ஒப்புக் கொண்டான். 80 பேர் பிழைப்பு கெடக்கூடாது என்பதற்காக இதை ஒப்புக் கொண்டதாக வெட்கம் மானமின்றி சொன்ன வித்யாதரன், வேலை இழந்த தொழிலாளர்களுக்கு உதவ வசூல் வேட்டையிலும் இறங்கி விட்டான். இவன் ஏற்கனவே தன் மகள் திருமணத்திற்கு தலைக்கு ரூ.25 வசூலித்த பலே கில்லாடி.

இத்தனைக்கும் அவர்களது கோரிக்கைகளைப் பாருங்கள். 1) பாதுகாப்பு கவசம் 2) மருத்துவ வசதி 3) அடையாள கார்டு ஆகியவை வேண்டும். 84 முதல் உயர்த்தப்படாத சம்பளத்தை உயர்த்த வேண்டும். 20 நாள் வேலை செய்தால் ஒரு நாள் முழுப்பெயர் போட வேண்டும்; இவைதான். தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பிய பின்னர் அடையாள அட்டை மட்டும் கொடுத்துள்ளார்கள்; மற்ற கோரிக்கைகள் அம்போ.

★ இத்தகைய தரகுத் தொழிலைச் செய்யும் தொழிலாள துரோகிகளை செங்கொடி ஏந்த நாம் அனுமதிக்கலாமா?

★ முன்னணியாளர்களை, போர்க்குணம் மிக்கவர்களை கருவறுக்கும் நயவஞ்சக நரிகளை நசுக்கி அழிக்க வேண்டாமா?

—என்று ஆத்திரத்தோடு அடுக்கடுக்காக பாதிக்கப்பட்ட அந்த தொழிலாளர்கள் கேள்விக் கணைகளை வீசிய போது 'கேரளாவைப்பார்' என்ற முழக்கம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

புரட்சிகர சித்தாந்தத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட, போர்க்குணமிக்க அரசியல் பயிற்சி அளிக்கக்கூடிய, ஆயுதந்தாங்கிய புரட்சிக்கு அணி திரட்டக்கூடிய தொழிற்சங்க தலைமையின் கீழ் அனைத்துத் தொழிலாளர்களையும் அணி திரட்டுவதே நமது கடமை என்ற சொல்லி விடைபெற்றுக் கொண்டு, கேரளாவைப் பார்த்த கொதிப்போடு ஊர் வந்து சேர்ந்தேன்.

—இளமாறன், தேனி.

படிப்பகம்

www.padippakam.com

# எதிர்க்கட்சிகளின் தேசிய மாற்று:



# கழுதைக்குப் பதிலாக ஓநாய்களா?

அடுக்கடுக்கான அரசியல் அம்பலப் படுத்தல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு விழிபிதுங்கி நிற்கும் ராஜீவ் கும்பலை அதிகாரத்திலிருந்து வீழ்த்தவும், மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் நப்பாசையோடு ஐக்கியப்படுவதற்கான முயற்சியில் எதிர்கட்சிகள் கடந்த இரு மாதங்களாக தீவிரமாக இறங்கின. பாசிச இந்திராவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்ததைப் போல '77ம் ஆண்டின் புத்துணர்ச்சி மீண்டும் பீறிட்டு எழுவதாக பீற்றிக் கொண்டார்கள். ஆனால் அது சோடா பாட்டில் உற்சாகம் போல 'புஸ்' என கிளம்பிய வேகத்திலேயே அடங்கிப் போய் விட்டது. '79ல் ஜனதா அவியல் கட்சி உடைந்ததைப் போல, இனி ஒட்டவே முடியாத உடைந்த கண்ணாடித் துண்டுகளாகி விட்டது.

போலிக் கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டு காலைவாரி விடுவார்கள் என்பதாலும், இந்து மதவெறி அமைப்பான பாரதீய ஜனதா கட்சி ஐக்கியத்தை ஏற்காததாலும் இவை தவிர பிற தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவது; ஒருவேளை ஒரே கட்சியாக ஐக்கியப்பட சாத்தியமில்லா விட்டால் அந்தந்த கட்சிகள் தங்கள் தனித்தன்மையை பின்பற்றிக் கொண்டே ஒரு சமஷ்டி கூட்டமைப்பாக ஒன்றுபடுவது; அதை காங்கிரசுக்கு தேசிய மாற்றாக நிறுவுவது என்ற திட்டத்துடன் எதிர்கட்சிகளின் ஐக்கியத்திற்கான முயற்சிகள் சூடு பிடிக்க ஆரம்பித்து. ஐக்கியத்திற்கான 'அவதார புருஷர்' ஜனதா தலைவர் சந்திர சேகர், சரண்சிங் மகன் அஜித் சிங்கைத் தலைவராகக் கொண்ட லோக்தளக் கட்சியையும், மாண்டுபோன பாசிச குலக்கொழுந்து சஞ்சய் காந்தியின் மனைவி மேனகாவின் கட்சியையும் ஜனதாவுடன் இணைக்கும் தீர்மானத்தை மார்ச் 5ந் தேதி நிறைவேற்றினார்.

சந்திர சேகரின் இந்த இணைப்பைக் கண்டு ஹெக்டே, பெர்ணாண்டஸ் முதலான அதிருப்தி கோஷ்டியினர் எரிச்சலடைந்தனர். இதே நேரத்தில் ஐக்கியத்திற்கான வேறு திட்டத்துடன் வந்த அரியானா முதல்வர் தேவிலாலுடன் ரகசியமாக கூடிக்குலாவினர். சந்திர சேகர், அஜித்சிங் ஆகியோரைக் கழட்டி விட்டு விட்டு ஜனதா, இரு லோக்தளங்கள், வி.பி. சிங் கட்சி, காங்கிரஸ் (எஸ்) ஆகிய ஐந்து கட்சிகளை ஐக்கியப்படுத்தும் திட்டத்துடன் ஹெக்டே, தேவிலால், பட்நாயக் அருண்நேரு, பெர்ணாண்டஸ், சத்யா தல் ஆகியோர் ரகசியமாகச் சந்தித்துப் பேசினர். ஏப்ரல் 5ல் புதிய தேசிய மாற்றுக் கட்சியைத் துவக்குவது, இக் கட்சிக்கு 'தேசிய மக்கள் கட்சி' எனப் பெயர் சூட்டுவது. வி.பி.சிங்கை தலைவராகவும், மற்றவர்களை உபதலைவர்களாகவும் அறிவிப்பது, ஜனதா தேர்தல் சின்னதையே இக்கட்சிக்கு பயன்படுத்துவது என்றும் தீர்மானித்தனர்.

அரியானான முதல்வர் தேவிலால் இப்புதிய திட்டத்தை அறிவித்ததும், ஐக்கியத்திற்கான முயற்சிகள் தனது திட்டத்திற்கு எதிராக நடப்பதைக் கண்டு எரிச்சலடைந்த சந்திரசேகர், ஹெக்டே அகில இந்திய அளவில் பிரபலமாவதைக் தடுத்து கர்நாடக நெருக்கடியில் சிக்க வைக்க திட்டமிட்டார். அதன்படி கர்நாடக நீர்ப்பாசன மந்திரி தேவகவுடா தலைன்மயில் ஏழு மந்திரிகளும் 50க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்களும் ஹெக்டேவுக்கு எதிராக கலகக் கொடி தூக்கினர்.

கர்நாடகத்திலிருந்து மூன்று ராஜ்யசபை எம்.பிக்களைத் தேர்ந்தெடுக்க, ஜனதா எம்.எல்.ஏக்கள் வாக்களிக்க வேண்டிய நேரத்தில் இப்படி அதிருப்தியாளர்கள் கழுத்தறுப்பதைக் கண்டுஹெக்டே பொருமினார். நிலைமையைச் சமாளிக்க ஆட்சித் தலைமையை உடனே புறப்பட்டு வரும்படி ஒரு புறம் தகவல் அனுப்பி விட்டு, மறுபுறம் எதர்க்கட்சியுள்ள காங்கிரசு எம்.எல்.ஏக்களை ராஜ்ய சபை தேர்தலில் ஜனதாவுக்கு ஆதரவாக வாக்களிக்கக் கோரி பேரத்தில் இறங்கினார். தனது விசுவாச கல்வீ மந்திரி ஜீவராஜ் ஆல்வா மூலம் ஒன்றரை லட்ச ரூபாயை அத்யந்தாயா, உமரப்பா ஆகிய காங்கிரசு எம்.எல்.ஏக்களுக்கு கொடுத்து ஹெக்டே விலை பேசிய விவகாரம் இன்று வெளிவந்து நாறுகிறது. இதைப் போல 12 காங்கிரசு எம்.எல்.ஏக்களுக்கு பணம் கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ராஜ்யசபா தேர்தல் நாளான மார்ச் 28 அன்று மதியம் 1.30 மணிவரை தேவகவுடா கோஷ்டியினர் வாக்களிக்க மறுத்துவிட்டனர். இன்னும் அரைமணி நேரமே இருந்தது அதன் பிறகு வாக்குப் பதிவு அலுவலகம் மூடப்பட்டுவிடும். தேவகவுடா கோஷ்டியினர் வாக்களிக்காவிட்டால் ஜனதாவின் மானம் கப்பலேறுவதோடு கட்சியே கர்நாடகத்தில் உடைந்து, ஆட்சியும் கவிழும் அபாயம் ஏற்பட்டது. கடைசி நேரத்தில் மது தண்டவதே பறந்து வந்து தற்காலிகமாக சமரசம் செய்ததன் பேரில், தேவகவுடா கோஷ்டியினர் ஜனதா வேட்பாளர்களுக்கு வாக்களித்தனர். தேவ கவுடா பதவி விலகினார். ஹெக்டே ஆட்சி மயிரிழையில் தப்பியது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தேவகவுடாவை விலை பேச மத்திய காங்கிரசு மந்திரி ராஜேஷ் பைலட், கர்நாடக எம்.பி நஞ்சே கவுடாவைத் தூது விட்டார். தேவகவுடா தனது ஆதரவாளர்களுடன் வெளியேறினால், அவரை முதல்வராக்க காங்கிரசு தனது ஆதரவைத் தரும் என்று ரகசியமாக பேரம் நடந்தது. தேவகவுடா இந்த சதிக்கு உடனடியாக உடன்பட மறுத்துவிட்டார். ஆனால் ஹெக்டேவுக்கு எதிராக இப்போது தேவகவுடா கோஷ்டி மீண்டும் கலகம் செய்து வருகிறது. ஹெக்டே ஆட்சி நீடிக்குமா என்பது மீண்டும் கேள்விக் குறியாகி விட்டது.

மறுபுறம் எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்திற்கு வேறு திசையில் முயற்சித்த அரியானா முதல்வர் தேவிலால் சந்திர சேகரை 'சீர்குலைவுவாதி' என்று சாடுகிறார். 'அரியானாவில் லோக்தள ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரசிடமிருந்து கையூட்டு பெற்றவர் தான் அஜித்சிங்' என்று பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறார். இதனால் ஆத்திரமுற்ற அஜித் சிங் கட்சியினர் உ.பி.யில் வாஜ்பாயும் தேவிலாலும் சேர்ந்து உரையாற்றிய கூட்டத்தில் ஊளையிட்டு ரகளை செய்தனர். ஜனதா செயலாளர் ரவீந்மகுத் 'ஐக்கியத்தை உடைக்கும் காங்கிரசின் ஐந்தாம் படைதான் தேவீலால்' என்று வெளிப்படையாக சா[illegible] கிறார். வி.பி. சிங் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ராம்தான், 'தமது குறுகிய நோக்கங்களுக்காக சந்திரசேகரும் அஜித் சிங்கும் ஐக்கியத்தை சீர்குலைத்து விட்டனர்' என்று வசைபாடுகிறார். எப்படியோ ஒரு[illegible] ழியாக எதிர்க் கட்சியினரிடையே நிலவி[illegible] நிழல் யுத்தம் தெருச்சண்டையாக முன்னே[illegible] விட்டது!

இதற்கிடையே, அஜித் சிங் கட்சியையும் மேனகா கட்சியையும் ஜனதாவுட[illegible] இணைத்து விட்ட பெருமையில் சந்திரசே[illegible] மூழ்கித் திளைக்கும்போது, 'ஆயிரமாயிர செயல்வீரர்களைக் கொண்டு மாதாந்தி[illegible] வேலைத் திட்டத்துடன் கறாராகவும் கட்டு[illegible] பாடாகவும் எங்கள் கட்சி இயங்கியது. ஜ[illegible] தாவில் அப்படிப்பட்ட நடைமுறை இல்லை' என்று மேனகா காந்தி விலாவில் குத்து[illegible] றார்.

சரண்சிங்கின் வாரிசு என்பதைத் த[illegible] வேறெந்த தகுதியுமில்லாத அஜித்சிங்[illegible] யும், பாசிச இளவரசன் சஞ்சய் காந்தியி[illegible] கொள்கைகளை நியாயப்படுத்தி புகழ்[illegible] டும் மேனகாவையும் கூட்டுச் சேர்த்து கொண்டு வாரிசு ஆட்சிமுறையையும்

படிப்பகம்

www.padippakam.com




வாதிகாரத்தையும் எதிர்க்கப் போவதாக ஜனதா வாய்ச்சவடால் அடிப்பது நல்ல வேடிக்கைதான், 77 லிருந்து கட்சித் தேர்தலே நடத்தாமல் தானே தலைவராக நீடித்துக் கொண்டு, தன் விருப்பத்துக்கு செயலாளர்களையும் நிர்வாகிகளையும் நியமித்துக் கொண்டு சந்திர சேகர் ஜனதாவில் கொட்டமடிக்கிறார்! இதோடு ஹெக்டே, பெர்ணாண்டஸ், மதுதண்டவேதே என்று ஆளுக்கொரு கோஷ்டிகள். இந்த லட்சணத்தில் இவர்கள் ராஜீவின் சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை மீட்கப் போவதாகக் கூறுவது நல்ல கூத்துதான்! இதேமுறையில் தான் கட்சியை ஆட்சியையும் தனது குடும்பச் சொத்தாகிக்கொண்டு ஆட்டம் போடுகிறார் தேவிலால். மத்திய ஆட்சியதிகாரத்தில் இல்லை என்பதைத் தவிர இக்கட்சிகளுக்கும் பாசிச ராஜீவ் கும்பலுக்கு எந்த வித்தியாசமும் இல்லை.

ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவுக்கு எதிராக மற்றொரு பிரிவு என்ற வகையில் எதிர்கட்சிகள் ஒரே கட்சியாக ஒன்றுபடுவது அவசியம். அதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பதையே இப்போதைய நிகழ்ச்சிகள் அனுபவமாகக் காட்டுகின்றன என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் உபதேசிக்கின்றனர். ஆனால் விழிப்படைந்த உழைக்கும் மக்களின் அனுபவம் வேறாக இருக்கிறது. 'இந்தக் கட்சிகள் அனைத்தும் மண் குதிரைகள்; எதிர்க் கட்சிகளின் ஐக்கியம் என்பது கானல் நீரே! ஐக்கியப்படுவதற்கான ஒரு சித்தாந்தக் கண்ணோட்டமின்றி, மாற்று அரசியல் - பொருளாதாரத் திட்டமின்றி, தனிநபர் அகங்காரம், கோஷ்டி சண்டை, பதவிப்பித்து, ஊழல், சர்வாதிகாரம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இக்கட்சிகளால் பாசிச ராஜீவ் கும்பலை ஒரு போதும் வீழ்த்த முடியாது. அதை மார்க்சிய லெனினியப் புரட்சியாளர்களால் மட்டுமே சாதிக்க முடியும்' என்ற அனுபவம்தான் அது!

● குமார்

## ஜனதா மகாராஜாக்கள்!

ஏதோ, காங்கிரசுக் கட்சியில்தான் பெரு நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள், மாஃபியா குண்டர்கள், அரசு நிதியைச் சூறையாடும் கொள்ளையர்கள் இருக்கிறார்கள் என்றில்லை. காங்கிரசுக்குத் தேசிய மாற்று என மார்தட்டிக் கொள்ளும் 'உத்தம சீலர்'களான ஜனதாவினர் அதற்கு சற்றும் சளைத்தவர்களல்ல.

காங்கிரசில் கருப்பையா மூப்பனார், அர்ஜுன் சிங் போன்ற நில முதலைகள் இருக்கிறார்களென்றால், ஜனதாவில் அதன் தலைவர் சந்திரசேகரே பெரிய நிலப்பிரபுவாக இருக்கிறார். சாதாரண விவசாயி மகனாக இருந்த சந்திரசேகர் இன்று நாடெங்கும் பல இடங்களில் பண்ணைகளை வைத்திருக்கும் பெரிய நிலத் திமிங்கலம். டெல்லியிலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள போண்ட்சி என்னுமிடத்தில் உள்ள 35 ஏக்கர் பரப்பளவிலான உல்லாசப் பண்ணை அவருக்குச் சொந்தம். இதே போல கேரளா, உ.பி. மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாட்டில் ஏற்காடு முதலான பல இடங்களில் பண்ணைகளை வைத்துள்ளார். 1983ல் சந்திரசேகர் கால்நடையாக நாடெங்கும் யாத்திரை செய்து திரட்டிய பல லட்சக்கணக்கான ரூபாய்கள்தான் இன்று பெரும் பண்ணைகளாக உருமாறி இருக்கிறது.

காங்கிரசைப் போலவே மாஃபியா குண்டர்களைக் கொண்டதுதான் ஜனதாவும். பீகாரின் தன்பாத் நிலக்கிரிச் சுரங்கத் தொழிலாளிகளின் எதிரியும், மாஃபியா குண்டனும் எம்.எல்.ஏ.வுமான சூர்யதியோசிங் ஜனதா கட்சியின் முக்கியபுள்ளி. சந்திரசேகரின் குடும்பம் தன்பாதில் தொழில் நடத்துவதற்கு சூர்யதியோசிங் உதவி செய்ததால் அதற்கு கைமாறாக சந்திரசேகரும், ஜனதா கட்சியில் பலரது எதிர்ப்பையும் மீறி அவனை அரவணைத்துக் கொண்டிருக்கிறார்.


உல்லாச வாழ்க்கை, ஊதாரி செலவுகள் செய்வதாக காங்கிரசைச்சாடும் ஜனதா காந்தியவாதிகள் காய்ச்சலுக்குக் கூட வெளிநாடு சென்று சிகிச்சை பெறுவது வாடிக்கை. கர்நாடகத்தின் எளிமையான முதல்வர் ஹெக்டே தொண்டை அறுவை சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குப் போய் வந்தார். முன்னாள் நடிகையை கடிமணம் புரிந்த கர்நாடக மந்திரி ரகுபதி, கடந்த ஆண்டு முழுவதும் தேனிலவுக்காக ஐரோப்பிய நாடுகளுக்குப் பறந்தார். சாதாரணமாக அவர் உணவருந்துவது ஐந்து நட்சத்திர ஓட்டலில்தான். வாரம் ஒருமுறை சென்னைக்கு விமானத்தில் பறந்து வந்து உல்லாச ஓட்டலில் ஓய்வெடுத்துச் செல்வது அவரது பொழுதுபோக்கு! சுருக்கமாகச் சென்னால் ஜனதா தலைவர்கள் காங்கிரசுக்கு சற்றும் சளைக்காத நவீன மகாராஜாக்களாகத்தான் வலம் வருகின்றனர்.

இந்த லட்சணத்தில் காங்கிரசுக்கு ஜனதா தேசிய மாற்று என்று நம்பச் சொல்வது மிகப் பெரிய ஏமாற்று. இரண்டுமே ஒரே நாணயத்தின் பக்கங்கள்தான்! இரண்டுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்!



படிப்பகம்

www.padippakam.com




London

Dear Sirs,

We refer to our telex 5425 dated 27.6.1981. We are hereby transfering the agreement conveyed under our aforesaid telex to you with the following amendments:

competition. However, later on at the time of negotiations if we are convinced that it is necessary to change the remuneration, we shall sit across and disc...

marketing expenses to be mutually ...

3. The validity of this agreeme... a period of one year ... the contract ... for the life of the ...

Thanking you.

Yours faithfully,
AB BOFORS ORDNANCE

Vice President, Marketing

Document 4: A communication, dated June 29, 1984, from Hans Ekblom to "M/s Moresco". It refers to Document 2 and to the Bofors attempt to sell the FH 77B to India. The "remuneration" payable is reduced to 8 per cent from 10 per cent of the contract value.

# கொள்ளைக்காரன் ராஜீவ்!

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையாக போபர்ஸ் பீரங்கி பேர ஊழலை திறமையாக மூடி மறைத்துவிட்ட பெருமிதத்துடன் திருவாளர் பரிசுத்தம் கோலாகலமாகக் காங்கிரசு மாநாடு கூட்டிய நேரத்தில் அபசகுனம் போல அந்தச் செய்தி வெளிவந்தது. ஏப்ரல் 22ந் தேதியன்று காலை தங்களுக்கு ஜால்ரா போடும் 'இந்து' பத்திரிக்கையைப் பார்த்ததும் காங்கிரஸ் கனதனவான்களுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. ஐயோ! இப்படி ஆகி விட்டதே என்று புழுங்கித் தள்ளினார்கள். மறுபுறம் எதிர்க்கட்சிகளுக்கோ ஏக குஷி!

போபர்ஸ் பீரங்கி பேரத்தில் இடைத்தரகர்களாகச் செயல்பட்ட ஸ்வென்ஸ்கா, மொரேஸ்கோ, ஏ.ஈ. சர்வீஸ் ஆகிய மூன்று கம்பெனிகளுக்குப் பின்னாலிருந்து கமிஷன் தொகை பெற்றவர்கள் ஹெச் (H) க்யூ (Q), ஜி (G) என்ற மூன்று புள்ளிகள் என்பது ஏற்கனவே அம்பலமாகியிருந்தது. இதில் 'ஹெச்' என்ற நபர் லண்டனைச் சேர்ந்த வர்த்தகப் புள்ளி என்றும் வெளியாகியிருந்தது.

இதில் 'ஹெச்' என்பவர் ஹிந்துஜா என்ற புரோக்கர்தான் என்பதையே ஆதாரங்களுடன் இந்து பத்திரிக்கை வெளியிட்டது. மொரேஸ்கோ என்பதும், பிட்கோ என்பதும் இந்துஜா சகோதரர்கள் வெளிநாட்டில் நடத்திவரும் சங்கம் லிமிடெட் என்ற கம்பெனியின் சங்கேதக் குறியீடுகள். இந்த இரண்டு பினாமி கம்பெனிகளின் பெயரில் தான் சுவிஸ் ரகசிய வங்கிக் கணக்கில் கமிஷன் தொகை போடப்பட்டுள்ளது என்பதை வங்கி ஆவணங்கள், போபர்ஸ் நிறுவனத்தின் 'டெலக்ஸ்' கடிதம் ஆகியவற்றை வெளியிட்டு இந்து நாளேடு அம்பலப்படுத்தியது. அடுத்த நாளே ஸ்வீடன் ரேடியோவும் இதை உறுதிப்படுத்தியது.

போபர்ஸ் ஊழல் நாடகத்தின் முதல் காட்சியில் வந்து தலைகாட்டிய முக்கிய புள்ளி தான் இந்துஜா. பின்னர் 'வில்லன்' வி.பி. சிங், பிறவி நடிகர் அமிதாப்பச்சன், மர்மச் சாமியார் சந்திரா சாமி, விசுவாச புரோக்கர் வின்சாடா என்று அடுத்தடுத்து வந்து சூடேற்றினார்கள். இப்போது காட்சியின் துவக்கத்தில் வந்து போன இந்துஜா மீண்டும் தோன்றுகிறார். எனவே இறுதிக் காட்சி விறுவிறுப்பாகத் தொடர்கிறது.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழலுக்கு முன் ஊழல் சமுத்திரத்திலிருந்து வெளியே தலை காட்டிய விவகாரம் மேற்கு ஜெர்மனியின் எச்.டி. டபிள்யூ எனும் நீர்மூழ்கிக் கப்பல் பேரம்தான். பாசிச இந்திரா - சஞ்சய் - மேனகாவின் தாய் அம்தேஸ்வர் ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். 430 கோடி ரூபாய் பேரத்தில் 7 சதவீதம் - அதாவது 30 கோடி ரூபாய் தரகுப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கப்பல் பேர ஊழலில் மிகப்பெரிய தரகு நிறுவனமாண இந்துஜாவின் கம்பெனியும், சுவராஜ் பாலின் காட்ரோ கம்பெனியும் ஜஜோடியாவின் ரோஜர் இன்டர் நேஷனல் கம்பெனியும் கமிஷன் ஏஜண்டுகளாகச் செயல்பட்டன.

எச்.டி. டபிள்யூ நீர்மூழ்கி ஆயுத பேர ஒப்பந்தம் கையெழுத்தானதும் டெல்லியிலுள்ள ஓபராய் ஷெராடன் எனும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் ஆடம்பர விருந்து நடத்திக் கொண்டாடியது இந்துஜா கம்பெனி. இதில் காங்கிரசு பெருச்சாளிகளும், ராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டு குடித்துக் கும்மாளமிட்டனர்.

இதற்கிடையே மே. ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பலின் உதிரிப் பாகங்களின் விலையை ஏற்றியதும் அது பற்றி இந்தியத் தூதர் அஜ்மனி விசாரித்த போது 'இந்தியத் தரகருக்கு

## பாராளுமன்றக் கமிட்டி செயல்பட்ட லட்சணம்!

சமீபத்தில் பாராளுமன்றக் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் தனக்கு உடன்பாடற்ற மறுப்பு குறிப்புரைகளை 38 பக்க அறிக்கையாக சமர்ப்பித்துள்ளார் அ.தி.மு.க. எம்.பி ஆலடி அருணா. பாராளுமன்றக் கமிட்டியில் அங்கம் வகித்த அவர், நேற்று வரை ராஜீவ் கும்பலுக்கு ஜால்ரா போட்டு விட்டு ஜானகி ஆட்சி கவிழ்க்கப்பட்ட எரிச்சலில் கமிட்டி செயல்பட்ட விதத்தை இந்த அறிக்கையில் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

- பாராளுமன்றக் கமிட்டியில் பொறுக்கி எடுக்கப்பட்ட ராஜீவ் கும்பலின் விசுவாசிகளே அங்கம் வகித்தனர். விசுவாசத்தில் முதலிடம் வகித்த சுமதி ஆரோன், மகாவீர் பிரசாத் ஆகியோர் இப்போது மந்திரிகளாக்கப்பட்டு உள்ளனர்.
- கமிட்டியில் பெரும்பான்மையாக உள்ள காங்கிரசுப் பெருச்சாளிகள் அநேக கூட்டங்களுக்கு வராமல் திட்டமிட்டே மட்டம் போட்டனர். இதனால் விசாரணையும் பரிசீலனையும் ஒப்புக்குத்தான் நடந்தது.
- விசாரணையைத் திசை திருப்பும் நோக்குடன் கமிட்டியின் பாதிக் கூட்டங்கள் போபர்ஸ் பீரங்கியின் தொழில் நுட்பத் திறனை ஆராய்வதிலேயே இருந்தது. நாட்டின் பல பகுதிகளுக்கு கமிட்டி உறுப்பினர்களைக் கூட்டிச் சென்று பீரங்கி சுடுவதை வேடிக்கை காட்டினர்.
- சாட்சிகள் விசாரிக்கப்படுவது பற்றி முன் கூட்டியே கமிட்டித் தலைவர் சங்கரானந்த் தகவல் தராமல் திட்டமிட்டே இழுத்தடித்தார். 2 மணி நேரத்திற்கு முன் திடீரென தகவல் தந்து சாட்சிகளை விசாரிக்கச் சொல்வதே வழக்கமாக இருந்தது.
- வழக்கறிஞர் ஜெத்மலானி, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் அருண்ஷோரி, போபார்சின் முன்னாள் தலைவர் அர்ட்போ முதலானோரை விசாரிக்க வேண்டுமென சில உறுப்பினர்கள் கோரியதை தலைவர் சங்கரானந்த் கடைசி வரை மறுத்து விட்டார்.
- கமிட்டிக்கு அரசு கொடுத்த ஆவணங்களும் முழுமையாக இல்லாமல் அரசு ரகசியம் என்ற பெயரில் சில பகுதிகள் வெட்டப்பட்டு திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்பட்டன. அதுவும் கூட மொத்தக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் சேர்த்து 5 பிரதிகளே தரப்பட்டன. அவற்றைப் பள்ளிக் கூட பிள்ளைகள் போல 2 மணி நேரத்திற்குள் கமிட்டி அரங்கத்திற்குள்ளேயே படிக்க சொல்லி பிடுங்கிக் கொண்டனர். இதனால் கமிட்டி உறுப்பினர்கள் முழுமையாகப் படிக்கவோ பரிசீலிக்கவோ வாய்ப்பே இல்லை. இப்போது விசாரணைக்குப் பின் பாராளுமன்ற கமிட்டி தொகுத்த அறிக்கை கூட இதே முறையில் அவசரமாகப் படிக்கச் சொல்லி இறுதியாக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கமிஷன் தொகை தர வேண்டியிருப்பதால் விலையேற்றம் அவசியமாவனது' என்று வெளிப்படையாகக் கூறியது. இத்தகவலை அன்றைய ராணுவ அமைச்சராக இருந்த வி.பி. சிங்கிடம் இந்தியத் தூதர் தெரிவித்ததும் அவர் கப்பல் பேர ஊழல் விசாரணைக்கு உத்திரவிட்டார் . ஆட்சியைப் பிடிக்க வி.பி. சிங் சதி செய்கிறார். என்ற ராஜீவ் கும்பலின் குற்றச் சாட்டுகள் அவதூறுகளுக்குப் பிறகு தூக்கியெறியும் முன்னே தாமே விலகிக் கொண்டார். ஏதோ இந்த அளவுக்காவது தப்பித்தோமே என்று ராஜீவ் கும்பல் மூச்சுவிட நினைத்த போது தான் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் கிளம்பி அதன் குரல் வளையை நெறித்தது.

போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து 1300 கோடி ரூபாய்க்கு பீரங்கிகள் வாங்கினால் 124 கோடி ரூபாய் லஞ்சம் என்று ஈராண்டுகளுக்கு முன் பேரம் முடிந்துள்ளது. இதையடுத்து '86ன் இறுதியில் சுவிஸ் வங்கியின் ரகசியக் கணக்கில் பல தவணைகளில் தரகுத் தொகை போடப்பட்டுள்ளது. போபர்ஸ் பீரங்கி பேரத்தில் தரகு வேலை செய்த வின் சாடா மற்றும் இந்துஜா ஆகிய புரோக்கர்களுக்கு மட்டுமல்ல, காங்கிரசின் முக்கிய புள்ளிகளுக்கும் 'தாமரை' ராஜீவுக்கும் கமிஷன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவும் சுவீடனின் சுயாட்சி உரிமையுடைய வானொலி அடுத்தடுத்து உறுதிப்படுத்தி, சுவீடன் பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியும் சந்தி சிரித்தது. ஆனாலும் இடைத்தரகர்களே இல்லை. ஊழலே நடக்கவில்லை என்று அப்பட்டமாக ராஜீவ் புளுகித்தள்ளினார். எதிர்க்கட்சிகளின் வாயடைக்க பல்லு பிடுங்கப்பட்ட, அதிகாரமில்லாத காங்கிரசு பெருச்சாளிகளைக் கொண்ட பாராளுமன்றக் கமிட்டியின் விசாரணைக்கு உத்திரவிட்டார்.

இதற்கிடையே ஊழல் பேரத்தில் வாங்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் ஐ.என். எஸ் சிசுமாரி கமாண்டரான நவீன் சோப்ரா கடந்த ஆண்டு. துப்பாக்கியால் சுடப்பட்டு மர்மமாக இறந்து கிடந்தார். 430 கோடி ரூபாய் பேரத்திற்குப் பிறகு ஜெர்மனியில் நீர்மூழ்கிக் கப்பல் கம்பெனியிடம் அவர் நேரடியாகப் பயிற்சி பெற்றவர். ஊழலில் பல ரகசியங்களைத் தெரிந்து வைத்திருந்தவர். அவர் தற்கொலை செய்து கொண்டதாக அதிகா

# ராஜீவின் பினாமி இந்துஜாக்களின் முகவிலாசம்

ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் பேரத்திலும், போபர்ஸ் பீரங்கி பேர்த்திலும் புரோக்கர்களாகச் செயல்பட்ட இந்துஜா குடும்பம் சர்வதேச அளவில் பெரும் ஆயுத பேரத் தரகர்கள். நேரு குடும்பத்தின் விசுவாசிகள். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள். ஏற்றுமதி - இறக்குமதி மற்றும் தரகு வேலை செய்வதுதான் இவர்களின் பிரதானத் தொழில்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பிரேமானந்த் தீப்சந்த் இந்துஜா, சணல், ஜவுளி, தேயிலை முதலானவற்றை ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார் குறிப்பாக ஈரானுடன் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த அவர் அதன் மூலம் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குத் தனது தொழிலை விரிவுபடுத்தினார். அவரது மகன்களான சிறீசந்த், கோபிசந்த், பிரகாஷ், அசோக் இந்துஜாக்கள் இத் தொழிலை ஆயுத பேரத் தரகுத் தொழில் அளவுக்கு முன்னேறி விட்டார்கள்.

ஈரான் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் சர்வாதிகாரியும் அமெரிக்க அடிவருடியுமான ஷா, இந்துஜாக்களின் நெருங்கிய கூட்டாளி. ஷா ஆட்சிக் காலத்தில் ஈரானில் இந்துஜாக்கள் கொடிகட்டிப் பறந்தார்கள். ஆயுத பேரத்தின் மூலம் ஈரானை ஷா சூறையாடுவதற்குப் புரோக்கர்களாக இருந்தது இந்துஜாக்கள் தான். 1960ல் இந்துஜாக்களுக்கு ஈரானில் நூற்றுக்கும் மேற்பட்ட சினிமா தியேட்டர்கள் இருந்தனவாம்!

பாசிச இளவரசன் சஞ்சய் காந்தியின் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்த இந்துஜாக்கள் இந்திராவின் அவசரநிலைப் பாசிச ஆட்சியின் போது ஈரானுடனான ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலமும், கர்நாடகத்திலுள்ள குதிரேமூக் இரும்புத் தாது திட்டத்திற்கு ஈரானிடமிருந்து இந்தியாவுக்கு நிதியுதவி வாங்கித் தந்ததிலும் புரோக்கர்களாகச் செயல்பட்டு கோடிக்கணக்கில் கொள்ளையடித்தனர்.

ஈரானில் புரட்சி வெடித்து சர்வாதிகாரி ஷா சூறையாடிய செல்வங்களோடு தப்பியோடியதும். இந்துஜாக்களும் தங்கள் தொழிலை வேறிடத்துக்கு மாற்றிக் கொண்டனர். பின்னர் சுவிஸ் நாட்டில் தாங்கள் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு ஒரு வங்கியே துவக்கி விட்டனர். சர்வாதிகாரி ஷா சூறையாடிய சொத்துக்களும், ஈரானிலிருந்து தப்பியோடி வந்த எதிர்ப்புரட்சியாளர்களின் சொத்துக்களும் இந்துஜாக்களின் வங்கிகள் மூலமாகத்தான் விபரம் கண்டறிய முடியாத ரகசிய கணக்குகளில் பல நாடுகளில் குவிக்கப்பட்டன.




இன்று லண்டன் - ஜெனிவா - நியூயார்க் என்று தொழிலை விரிவு படுத்தியுள்ள இந்துஜாக்கள் வெளிநாடுகளில் மிகப் பிரபலமானவர்கள். இவர்கள் வீட்டுப் பண்டிகைளில் பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரே வந்து விருந்துண்டு போகிறார். ராஜீவின் விசுவாச கவர்னர் அலெக்சாண்டர் லண்டனில் ஹைகமிஷனராகச் செயலாற்றிய போது இந்துஜாக்களை அரசு மரியாதைக்குரியவர்களாக நடத்தினார். மறுபுறம் பாராளுமன்ற சபாநாயகர் பலராம் ஜாக்கர் உள்ளிட்ட காங்கிரசு பெரும் புள்ளிகள் அவ்வப்போது இந்துஜாக்களால் உபசரிக்கப்பட்டு உள்ளனர் அவர்களும் நன்றி மறவாமல் வாலைக் குழைக்கின்றனர்.

இந்துஜாக்கள் இந்திப் படங்களிலும் கொடி கட்டிப் பறக்கின்றனர். ஆயுத பேரக் கொள்ளையர் ராஜீவின் நெருங்கிய கூட்டாளியும் அந்நிய செலாவணி மோசடியில் புகழ் பெற்றவருமான அமிதாப்பச்சன் படங்களுக்கு நிதியுதவி செய்வது இந்துஜாக்கள்தான். அதற்கீடாக இந்துஜா நிறுவனங்களில் அமிதாப்பச்சன் பெருந்தொகையை முதலீடு செய்துள்ளார். சமீபத்தில் அமிதாப்பின் வருமானவரி தகவல்படி தனது ஆண்டு வருமானமான ரூ.22 லட்சத்தில் ரூ.19 லட்சத்தை இந்துஜா நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளார். இதோடு இந்துஜாக்களின் மருத்துவமனைக்கு ஏராளமான 'நன்கொடை'யும் கொடுத்துள்ளார்.

ஈரானுக்கு ஒரு ஷா என்றால் இந்தியாவுக்கு ஒரு ராஜீவ்! இரு நாட்டுக் கொள்ளையர்களுக்கும் இந்துஜாக்கள் தான் இடைத்தரகர்கள். எனவேதான் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றுவதில் குறியாய் இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ரிகள் மழுப்பினார்கள். அதன் பிறகு ஓராண்டுக்குப் பிறகு இப்போது புலனாய்வுத் துறையினர் நடத்திய விசாரணையில் நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியதில் ஊழல் எதுவுமே நடக்கவில்லை என்றும் எனவே விசாரணையை மூட்டை கட்டி விட்டதாகவும் ராணுவ மந்திரி கே.சி. பந்த் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அடுத்த சில நாட்களிலேயே போபார்ஸ் பீரங்கி பேர ஊழலைக் கண்டறிய நிறுவப்பட்ட பாராளுமன்ற கமிட்டியும் ராஜீவுக்கு நற்சான்றிதழ் கொடுத்து விசாரணையை மூட்டை கட்டி விட்டது. 44 கூட்டங்கள், 15 சாட்சிகளிடம் 200 மணி நேர விசாரணை, 500 ரகசிய கோப்புகள் பரிசீலனை எல்லாவற்றுக்கும் பிறகு 'தரகுத் தொகையான 64 கோடி ரூபாய் எந்தெந்த புரோக்கர்களுக்கு கொடுக்கப்பட்டது என்பதைக் கண்டறிய முடியவில்லை. வியாபார ரகசியப்படி போபர்ஸ் நிறுவனம் யார் யாருக்கு லஞ்சம் கொடுத்தது என்பதைக் கூற மறுக்கிறது. அதை நாம் ஏற்கத்தான் வேண்டியுள்ளது என்று பரிகசிக்கத்தக்க' அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ராஜீவ் கும்பலுக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளது.

ஆனால் இத்தனை நாளும் ராஜீவ் கும்பலுக்குக் கைத்தாளம் போட்டுக் கொண்டிருந்த அ.தி.மு.க. (ஜானகி கோஷ்டி) எம்.பிக்கள் திடீரென 'தன்மான உணர்வு' பொங்கியெழுந்து, பாராளுமன்றக் கமிட்டி செயல்பட்ட லட்சணத்தை அடுக்கடுக்காக அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கும் மேலாக, இடைத்தரகனாக செயல்பட்டது இந்துஜாதான் என்பதற்கான இன்னுமொரு ஆதாரத்தையும் சமீபத்தில் வெளியிட்டுள்ளது, இந்து நாளேடு.

இனி காங்கிரசுப் பெருச்சாளிகளே நியாயப்படுத்த முடியாத நிலையில் ஆயுத பேரக் கொள்ளையர்களான பாசிச ராஜீவ் கும்பல் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டது. ஆயுதக் கொள்ளை! அதுதான் இன்றைய உலகில் குறுகிய காலத்திலேயே குபேரராவதற்கான தொழில். ஆயுத விற்பனையின் மூலம்தான் ஏகாதிபத்தியங்கள் மற்றெல்லாத் தொழில்களையும் விடக் கூடுதலாகக் கொள்ளையடிக்கின்றன. அதே போலத்தான் ஏழை நாடுகளின் பிற்போக்கு ஆளும் கும்பல்கள் மற்றெல்லா வழிகளையும் விட ஆயுத பேரத் தரகு வேலை செய்து தங்கள் நாட்டையே சூறையாடுகின்றன. ஈரானின் ஷா, பிலிப்பைன்சின் மார்க்கோஸ், சிலியின் பினோசெட் என்று சொந்த நாட்டைச் சூறையாடிய பாசிஸ்டுகளின் வரிசையில் இப்போது பாசிச ராஜீவும் அணிவகுத்து நிற்கிறார். இனியும் ஆயுதபேரக் கொள்ளையர்கள் நடத்திய விசாரணை நாடகத்தை நம்பிக் கொண்டிருப்பதில் பலனில்லை. இந்திய நாட்டை ஒட்டச்சுரண்டி தப்பியோடுவதற்கு முன் உழைக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆயுத பேரக் கொள்ளையர்களைத் தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**மனோகரன்.**

# மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையில் இந்திய அரசாங்கம்

உங்கள் ஊரில் ஒருவர் ஊரெல்லாம் கடன் வாங்கி வைத்திருக்கிறார்; மொத்தம் ரூ.3,400 என வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு ஆண்டு வருமானம் ரூ.1,000 வருகிறது. அதில் 200 ரூபாய் வட்டியாக கொடுத்து விடுகிறார். சில பொருட்களை தனக்கு வேண்டியவர்களுக்கு வாங்கிய விலைக்கு குறைவாக தருகிறார்; அப்புறம் ஒரு துப்பாக்கி வாங்கி வைத்துக் கொள்கிறார். இந்த வகையில் ரூ.280 செலவழிக்கிறார். பின் தன் குடும்ப செலவுகளுக்கு ரூ.400 கடன்வாங்கி செய்கிறார் என்றால் அவ்வரைப் பற்றி என்ன கருதுவீர்கள்? அடுத்த ஆண்டு இன்னும் அதிகமாக கடன் வாங்கி, இன்னும் அதிகமாக வட்டி கொடுக்கிறார்; இன்னும் ஒரு துப்பாக்கி வாங்குகிறார்; இதை அவர் தொடர்ந்து செய்தால் என்ன ஆவார்? திவாலா ஆவார்; எல்லோருடைய கண்டனத்திற்கும் ஆளாவார்.

இதே மாதிரி தான் இந்திய அரசாங்கமும் செயல்பட்டு மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது.

அரசாங்க கணக்குப்படியே, அதன் மொத்த உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் இரண்டும் சேர்ந்து105267 கோடி ரூபாய்களாகும். இதில் 22%, அதாவது, 23000 கோடி ரூபாய்கள் வெளிநாட்டில் வாங்கிய கடன். ஆனால், அரசாங்கம் திட்டமிட்டு தனது கடன் தொகையை குறைத்து வெளியிடுகிறது. எப்படி என்றால், 1985 ம் ஆண்டில் தனது வெளிநாட்டுக் கடன் 18,153 கோடி ரூபாய்கள் தான் அரசாங்கம் சொல்லிற்று. ஆனால் உலக வங்கியோ ரூ.35,000 கோடி கடன் என கணக்கு தந்தது. கடன் வாங்கிய நமது சர்க்கார் 'வறட்டு கௌரவம்' பார்த்து பொய் சொன்னலும் கடன் கொடுத்தவன் உண்மையை புட்டு வைத்து விட்டான். அதனால் தான் அரசின் மொத்தக் கடன் இன்னும் அதிகமாக இருக்கும் என்று சொல்கிறோம்.

இன்னும் பிராவிடண்ட் நிதி, சிறுசேமிப்பு நிதி ஆகியவைகளையும் அரசாங்கம் தான் செலவு செய்கிறது. இதுவும் கடன் கணக்கில் வர வேண்டியது; ஆக, அரசாங்கத்தின் மொத்தக் கடன் 2,24,000 கோடி ரூபாய்கள் என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர் பல்கிவாலா சொல்லியுள்ளார். சென்ற ஆண்டு சர்க்காரின் மொத்த வருவாயை விட இது 3.4 மடங்கு அதிகமாகும்.

'அரசாங்கம் தானே கடன் வாங்கிச்சு; அது கட்டிகிட்டு போவுது; எனக்கென்ன, ஆள விடுங்க' என்று எண்ணி விடாதீர்கள். நம்முடைய உழைப்பையும் நமது நாட்டு செல்வ வளங்களையும் அடமானம் வைத்து தான், அரசாங்கம் கடன் வாங்கியுள்ளது. எனவே, இவையெல்லாம் நமது தலையில் தான் சுமையாக விழுந்துள்ளது. ஈவு போட்டால், பிறந்த குழந்தையையும் சேர்த்து நம் ஒவ்வொருவர் மீதும் 2,635 ரூபாய் கடன் வருகிறது. பெரும்பாலான நமது உழைக்கும் மக்கள் கஷ்டப்பட்டு ஈட்டும் வருடாந்திர தொகையை விட இது அதிகமாகும். எவ்வளவு பெரிய சிக்கலில் மாட்டப்பட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. என எண்ணுகிறேன். புரியும்படி சொல்கிறேன். ஒரு நிமிடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என கடனை திருப்பிக் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். இரவு பகல் என்று பாராமல் கொடுத்துக் கொண்டே இருந்தால் கூட மொத்தக் கடனையும் கொடுத்து முடிய 42 வருஷம் ஆகும்.... அடேயப்பா! என்கிறீர்களா? தலையை சுற்றுகிறதா? பரவாயில்லை, கடனை வாங்குவதில் நமது சர்க்காருக்கு அண்ணன்கள் எல்லாம் இருக்கிறார்கள்; உலகத்தில் நாலாவது இடம்தான் இந்தியாவிற்கு; அதனால மனச கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு அடுத்த பாராவைப் படிங்க, ஏனென்றால் இன்னும் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் உள்ளன.

இந்த மட்டும் அரசாங்கம் கடனைக் கட்டுப்படுத்தவில்லை; மாறாக, திட்டமிட்டு கடனை அதிகமாக வாங்கிக் கொண்டே போகின்றது. அடுத்த வருடம் 27,000 கோடி ரூபாய் கடன் வாங்க உத்தேசித்துள்ளது. இப்பொழுதெல்லாம் அரசாங்க கம்பனிகள் கூட வெளிநாட்டிலிருந்து கடன் வாங்குகின்றன. அரசாங்கம் அதிகமாக வட்டி கொடுத்து கடன் வங்குகிறது. அரசாங்கம் இப்படிச் செய்து பெரும்பாலான பணத்தை பணச் சந்தையிலிருந்து வாங்கிச் சென்று விடுகின்றது; அந்த அளவிற்கு 14.8% வட்டி கொடுக்கிறது; இதனால் எங்களுக்குப் போதுமான கடன் கிடைக்க மாட்டேன் என்கிறது என தனியார் முதலாளிகள் புலம்புகின்ற அளவிற்கு அரசாங்கம் கடன்



படிப்பகம்

www.padippakam.com

வாங்கி குவிக்கின்றது. அத்துடன், அரசாங்கம் தான் வழங்கும் வட்டிக்கு வரிவிலக்கும் கொடுக்கிறது. அதையும் சேர்த்தால் அரசாங்கம் கொடுக்கும் வட்டி 20% ஆகிறது; தனியார் துறையோ அதிகபட்சம் 15% தான் சட்டப்படி வட்டி கொடுத்து கடன் வாங்கலாம்.

வருடத்திற்கு வட்டியாக மட்டும் ரூ.14,000 கோடியை அரசாங்கம் கட்டுகிறது. நமது அன்னியச் செலாவனியில் 27% வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி கட்டவே போய்விடுகின்றது. வருடத்திற்கு வருடம் வட்டியும் கடனும் ஏறிக் கொண்டே போகின்றது. இதன் விளைவாக புதிதாக வாங்கும் கடன் ஏற்கனவே வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே போதுமானதாக இல்லாமல் போகும் அபாயகரமான கட்டத்தை இந்தியா நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை கடன்பொறியில் அகப்பட்டுக் கொள்வது என்று பொருளாதார அகராதியில் சொல்கிறார்கள்.

1986-87 ல் அரசாங்கம், தான் புதிதாக வாங்கிய கடனில் மூன்றில் இரண்டு பங்கை பழைய கடன்களுக்கு வட்டியாகவே செலுத்தியது. மத்திய மாநில அரசுகளின் மொத்த வருவாயில் 13% வட்டி கட்டவே போய் விடுகிறது. 1987 - 88ம் ஆண்டு அரசாங்கம், வெளிநாட்டுக் கடனில் திருப்பிக் கட்டியது ரூ.988 கோடிகளாகும்; ஆனால் கட்டிய வட்டியோ ரூ.1,031 கோடிகளாகும்.


சரி அரசாங்கம் எதற்காக இவ்வளவு கடன் வாங்குகிறது எனன மலைக்கிறீர்களா? உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நாட்டின் முன்னேற்றத்திற்கு கடன் வாங்குகிறோம் என ராஜீவ் காந்தியும் அவரது ஊது குழல்களும் சொல்கின்றனர். ஆனால் உண்மையில் உற்பத்திக்கான முதலீடாக இதன் பெரும்பகுதி போவதில்லை. மத்திய அரசின் மொத்த வருவாயில் 48% இராணுவம், வட்டி கட்டுதல், உர மற்றும் உணவு, தானியங்களுக்கான மானியங்கள் ஆகியவைகளுக்கு மட்டும் இந்த ஆண்டு செலவாகும் என திட்டக் கமிஷன் கூறுகிறது. அதாவது, வண்டி சோறும் அண்டா குழம்பும் தின்கிற ராட்சசன் மாதிரி மக்கள் விரோத, ஒட்டுண்ணி இராணுவம் தின்று தீர்க்கிறது. உரத்திற்காக மட்டும் இந்த ஆண்டு ரூ.3,000 கோடி மானியம் தரப்படுகிறது. இதில் மிகப் பெரும் பகுதியை நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் பங்கிட்டு கொள்கின்றனர். இவையல்லாமல் அதிகார வர்க்கம் சம்பளம், சலுகை என்ற பெயர்களில் பணத்தை ஏப்பமிடுகிறது. இவ்வாறு வருவாயில் பெரும்பகுதி உற்பத்தியில் ஈடுபடாத உறிஞ்சிக் கொழுக்கும் ஒட்டுண்ணிகளுக்கான தீனியாக சென்று விடுகிறது.

அடுத்து, ஏற்றுமதிக்கான உற்பத்திக்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஏகாதிபத்திய வல்லரசுகளின் வாலாட்டும் பிராணியான ராஜீவ் காந்தி எஜமானர்களின் கட்டளைப்படி, நமது நாட்டு மலிவான உழைப்புச் சக்தியையும் மலிவான கச்சாப்பொருட்களையும் கொண்டு பொருட்களை தயாரித்து ஏற்றுமதி செய்கின்றார். உலக சந்தையை தமது கட்டை விரலால் அழுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்தியங்கள் இவற்றை அடிமாட்டு விலைக்கு வாங்குகின்றன. எனவே, உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு இலாபம் ஏற்பட அரசாங்கம் மானியம் தருகின்றது; வரிச்சலுகைகள் தருகின்றது. இதனால் அரசாங்கத்திற்கு பணப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் ஏற்றுமதிக்கு தகுதியான பொருட்களைத் தயாரிக்க நவீன எந்திரங்களை ஏகாதிபத்தியங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க கட்டாயப்படுத்தப்படுகிறது. இதனால் அன்னிய செலாவணி பற்றாக்குறை ஏற்படுகிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசாங்கம் கடன் வாங்குகிறது. தொழில் வளர்ச்சிக்காக என்று இதை சித்திரித்தாலும், 21ம் நூற்றாண்டை நோக்கி இந்தியாவை முன்னேற்ற என்று மூச்சுக்கு மூச்சு பிரச்சாரம் செய்தாலும் உண்மையில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்கவும் தனியார் தரகு முதலாளிகளும் அதிகாரவர்க்கமும் இதில் கமிஷன் பெறவுமே செய்யப்படுகின்றது.

ஆண்டுக்கு ஆண்டு அரசாங்கம் அதிகம் அதிகமாக கடன் வாங்குவதற்கான அடிப்படைக் காரணங்கள் இவைதான். ஐந்தாண்டு திட்டங்களுக்கான முதலீடு பற்றிய கீழ்க்கண்ட புள்ளி விபரம் இதை இன்னும் தெளிவாக காட்டும்.

| ஐந்தாண்டு திட்டம் | அரசாங்கம் செய்யும் முதலீடு | உள்நாட்டு கடன்மூலம் முதலீடு | வெளி நாட்டுக் கடன்மூலம் முதலீடு |
|---|---|---|---|
| 5-வது | 52% | 33.2% | 14.8% |
| 6-வது | 36.7% | 55.6% | 7.7% |
| 7-வது | 0 | 90% | 10% |

—முழுக்க கடன் வாங்கியே முதலீடு செய்யும் அளவிற்கு நிலைமை மோசமாக போய்க் கொண்டிருக்கிறது. இவ்வளவு கடன் வாங்கி முதலீடு செய்கிற அரசாங்க கம்பனிகள் தருகிற வருமானம் மொத்த முதலீட்டில் 2.8% மட்டுமே. ஆனால் அரசாங்கம் கடனுக்குத் தர வேண்டிய வட்டியே ஏறத்தாழ 20% ஆகும். இதன் விளைவு தான் திவாலா நிலைமை! அரசாங்க கம்பனிகள் தமது உற்பத்திப் பொருட்களை தனியார் முதலாளிகளுக்கு குறைந்த விலைக்கு விற்பதாலும், அதிகார வர்க்கமும் காண்ட்ராக்ட்




படிப்பகம்

www.padippakam.com

கார்களும் வோட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகளும் அடிக்கிற கொள்ளையும் தான் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்!.

நிலவரம் எப்படி ஆகிவிட்டதென்றால், தனது அன்றாட நிர்வாகத்தை நடத்தவே அரசாங்கம் கடன் வாங்க வேண்டிய நிலை மைக்கு ஆளாகி விட்டது. கேரள மாநில அர சாங்கம் தனது அலுவலர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூட முடியாத திவாலா நிலை மைக்கு உள்ளானதைப் பற்றி சில மாதங்க ளுக்கு முன் அடிப்பட்ட செய்தி உங்களுக்கு நினைவிருக்கலாம். மாநில அரசாங்கங்கள் கடன் வாங்கி தள்ளுவதும் 'மாநில அர சாங்கங்களை தனது பாணையக்காரர்களாக நடத்தும் மத்திய அரசாங்கம் தனது கடன் சுமையை மாநில அரசுகள் மீது தள்ளி விடு வதும் தான் இதற்குக் காரணமாகும்'' நாங்கள் மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியை விட மிக அதிகமாக திருப்பி செலுத் துகிறோம்; மத்திய அரசிடம் நாங்கள் கடன் பொறியில் மாட்டியுள்ளோம்'' என மேற்கு வங்க நிதியமைச்சர் தாஸ்குப்தா சொன்னது மிகவும் பொருத்தமானதாகும்.

இதுவரை விளக்கியதிலிருந்து, ஏகாதிபத் தியங்கள் கொள்ளை அடிக்கவும், பெரிய பெரிய தரகு முதலாளிகளும் (டாட்டா, பிர்லா போன்ற), மூப்பனார் போன்ற நிலப் பிரபுக்களும் அதிகார வர்க்கமும் காண்ட் ராக்ட்காரர்களும், வோட்டுப் பொறுக்கி ஊழல் அரசியல்வாதிகளும் கொழுப்ப தற்கே அரசாங்கம் கடன் வாங்குகிறது என் பது புரிந்திருக்கும்; வட்டி கட்ட இன்னும் கடன்; அப்புறம் வட்டி என்று கடன் பொறியை நோக்கி இந்திய அரசாங்கம் மிக வேகமாக சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் இதன் பாதிப்பு முழுவதும், சுமை முழுவதும் உழைக்கும் மக்கள் மீது தான் ஏற்றி வைக்கப்பட்டுக் கொண்டேயி ருக்கின்றது; எந்த அரசாங்கம் வந்தாலும் இதே நிலைமை தான் நீடிக்கின்றது. அதா வது, விலைவாசி ஏறிக் கொண்டே போகின் றது; உண்மை ஊதியம் குறைகிறது; தொழி லாளர்கள் நவீன மயம் என்ற பெயரில் விரட்டப்படுகிறார்கள்; வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகுகிறது; வறுமை அதிக ரித்துக் கொண்டே போகின்றது.


இது எப்படி என புரிந்து கொள்ள அர சாங்கம் யாரிடமிருந்து எப்படி கடன் வாங் குகிறது என தெரிந்து கொள்வது அவசியம்.

இந்திய அரசாங்கம் அமெரிக்கா, ரசியா போன்ற வல்லரசு நாடுகளின் அரசாங்களிட மிருந்தும் அமெரிக்காவால் கட்டுப்படுத்தப் படும் உலக வங்கி, ஐ.எம்.எஃப். போன்ற பகாசுர நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் வாங்குகிறது. இது வெளிநாட்டுக் கடனா கும். இந்தியா எவ்வளவு கடன் கேட்டா லும், எவ்வளவு கடன் கொடுப்பது, எந்தி ரங்களாக கொடுப்பதா, பணமாக கொடுப் பதா என்பதை எல்லாம் ஏகாதிபத்தியங்கள் தான் தீர்மானிக்கின்றன. அது மட்டுமல்ல, கடன் வேண்டுமென்றால், கல்வி, சுகாதாரம் போன்ற அபிவிருத்தி திட்டங்களை வெட் டச் சொல்லியும், நவீன எந்திரங்களைப் புகுத்தி தொழிலாளர்களை வேலையை விட்டு விரட்டுமாறும், புதிதாக ஆட்களை வேலைக்கு எடுக்கக் கூடாது என்றும், தனக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்குமாறும் தனது எந்திரங்கள், தொழில் நுட்பங்களை அதிக விலைக்கு வாங்குமாறும் உத்தரவு போடுகின்றன. அவர்களின் ஏவலாளாக இருக்கிற இந்திய சர்க்கார் அவ்வாறே செய் கிறது.

அடுத்து, அரசாங்கம் உள்நாட்டில் கடன் வாங்குகிறது. இதில் மூன்று வழிகள் உள் ளன.

முதலாவதாக, அரசாங்கம் கடன் பத்தி ரங்களை வெளியிடுகிறது. இத்தனை சதவி கித வட்டியுடன் இத்தனை ஆண்டுகளில் அசலையும் கொடுத்து விடுகிறேன் என்ற உறுதிமொழியோடு பொதுமக்களிடமிருந் தும் எல்.ஐ.சி. போன்ற நிதி நிறவனங்களிட மிருந்தும் கடன் வாங்குகிறது.

இரண்டாவதாக, பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட




கருவூலப் பத்திரங்கள்' என்ற ஒரு வகையான கடன் பத்திரங்களை ரிசர்வ் வங் கியிடம் கொடுத்து கடன் பெறுகிறது. ரிசர்வ் வங்கி புதிதாக நோட்டுகள் அடித்து பணம் கொடுக்கின்றது.

மூன்றாவதாக, ஒவ்வொரு வங்கியும் தனது இருப்பில் ஒரு குறைந்த பட்ச தொகையை எப்போதும் வைத்திருக்க வேண்டும். இந்த அளவை அரசாங்கம் திடீ ரென அதிகப்படுத்தும். இதனால் வங்கிகள் கொடுக்கும் கடனின் அளவு குறையும்; வட்டி அதிகரிக்கும். அப்பொழுது அதிக வட்டி கொடுத்து தனியார் துறை அரசாங்கத் துடன் போட்டி போட்டு கடன் வாங்க முடி யாத நிலை ஏற்பாடுகிறது அதன் மூலம் அர சாங்கம் அதிக அளவு கடன் பெறுகிறது.

இவை எல்லாம் சேர்த்து உள்நாட்டில் உற் பத்திப் பெருக்கத்தை விட பணப்பு ழக்கத்தை அதிகப்படுத்துகிறது; எனவே பண வீக்கம் ஏற்பட்டு உழைக்கும் மக்களின் உண்மை ஊதியம் குறைகிறது; விலைவாசி ஏறுகிறது; மேலும் ஏற்கனவே விளக்கிய வாறு, வாங்கிய கடனுக்கான வட்டி, மானி யங்கள், வெள்ளை யானை எனும் அதிகார வார்க்கம் — இராணுவம் தின்று கொழுப் பது ஆகியவை காரணமாக வளர்ச்சித் திட் டங்கள் வெட்டப்படுகின்றன; புதிய முதலீ டுகள் குறைக்கப்படுகின்றன.

இப்படித்தான் உழைக்கும் மக்கள் நேர டியாக பாதிக்கப்படுகிறார்கள். இவைகளை எதிர்த்து பல்வேறு வழிகளில் உழைக்கும் மக்கள் போராடுகிறார்கள். உடனே அர சாங்கம் 'போராடவா செய்கிறாய்; அடேய் உனக்கு அவ்வளவு திமிரா' என கேட்டு ஒடுக்கிறது; புதுப்புது கருப்புச் சட்டங்களை போட்டு பத்திரகாளி மாதிரி கண்ணை உருட்டி மிரட்டுகிறது. பாசிசத்தை ஏவிவிட வும் தயாராகிக் கொண்டு வருகிறது.

இதைக் கண்டு நாம் பயந்து விடக்கூ டாது. எதிர்த்துப் போராடி முறியடித்து உழைக்கும் மக்களுக்கு அதிகாரத்தையும் ஜனநாயகத்தையும் அளிக்கின்ற ஒரு புதிய ஜனநாயக அரசை அமைக்க வேண்டும், அந்த அரசு ஏகாதிபத்திய சுரண்டல்காரர்க ளுக்கு கொடுக்க வேண்டிய அன்னிய கடனை கொடுக்க முடியாது என பிரகடனப் படுத்த வேண்டும். உள்நாட்டில், பெரும் தரகு முதலாளிகளின் சொத்துக்களைப் பறி முதல் செய்ய வேண்டும்; ஒட்டுண்ணி இரா ணுவம், அதிகார வர்க்கத்தை கலைத்து விட வேண்டும்; விவசாயிகளை பெரும்பான் மையாகக் கொண்ட நமது நாட்டிற்கு ஏற்ற ஒரு பொருளாதார திட்டத்தின்படி வளர்ச் சித் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும்; அதன் மூலம் உள்நாட்டு கடனை பைசல் செய்ய வேண்டும்;

இதற்கு போராட வேண்டும்; சும்மா போராடினால் போதாது; மாசேதுங் சொன்ன மாதிரி ஆயுதந்தாங்கிப் போராட வேண்டும். 'அடே, கடன்காரா' என அழைக்கப்பட்டு, அவமானப்பட்டு வாழ் வதை விட போராடுவது உன்னதமானது.

நன்றாக யோசித்துப் பாருங்கள்! முடிவெ டுங்கள்!!

**• இரணியன்**

படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

7

# “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்”

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் பி. ராமமூர்த்தி அடிப்படையில் ஒரு பார்ப்பனீய - காந்திய - காங்கிரசுக்காரர் என்பதற்கு மேலும் பல ஆதாரங்களைத் தருகிறது அவர் எழுதிய ''விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்ற நூல். நூலின் தலைப்பிலேயே ஆரிய மாயையா? திராவிட மாயையா? என்கிற கேள்வியை எழுப்புகிறார் ராமமூர்த்தி; இரண்டுந்தான். ராமமூர்த்தி உட்பட போலிக் கம்யூனிஸ்டுகள் ஆரிய மாயையிலும் அண்ணாத்துரை உட்பட விடஇயக்கத்தினர் திராவிட மாயையிலும் மூழ்கிப் போனதையே காண முடிகிறது.

அண்ணாத்துரை உட்பட திராவிட இயக்கத்தினரோ பகிரங்கமாக அறிவித்து விட்டு திராவிட மாயையை உருவாக்கினார்கள். ராமமூர்த்தி உட்பட போலிக் கம்யூனிஸ்டுகள் தொழிலாளர் இயக்கம் என்கிற போர்வையில் ஆரிய மாயையைக் கடத்தி வருகிறார்கள். இந்த போலிக் கம்யூனிஸ்டுகள் ஆரிய மாயையில் மூழ்கிப் போய் பாப்பனீய - காந்திய - காங்கிரசுவாதிகளாக மாறி தொழிலாளர் இயக்கத்திற்கு துரோகமிழைத்ததினால் தான் அண்ணாத்துரை போன்றவர்கள் தமிழர்களை திராவிட மாயையில் வீழ்த்தி விட முடிந்தது.

அண்ணாத்துரை உருவாக்கிய திராவிட மாயைகள் பலவற்றைப் பின்வருமாறு ராமமூர்த்தி அம்பலப்படுத்துகிறார்.

* திராவிட இயக்கத்தினர் இன்று பாரம்பரிய உரிமை கொண்டாடும் நீதிக்கட்சித் தலைவர்களை அரண்மனைவாசிகள், ஆகாப்பேர்வழிகள், பார்ப்பனரல்லதார் படையைக் கட்டி துரைமார்களிடம் சுயலாபம் தேடிக் கொள்ளும் அந்தரங்க நோக்கத்துடன் அரண்மனை அரசியல் நடத்திய அபூர்வமனிதர்கள் என்று அண்ணாத்துரையால் நிராகரிக்கப்பட்டவர்கள்.

இப்படி நீதிகட்சித் தலைவர்களை நிராகரிப்பது; காலனிய ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெறுவதை ஆதரிப்பது ஆகிய இரண்டு முடிவுகளையும் கூட 1947, 48ல் வேறு வழியின்றி சந்தர்ப்பவாதமாக அண்ணாத்துரை — மேற்கொண்டார். நீதிக்கட்சி சம்பாதித்து வைத்திருந்த ''பிரிட்ஷாரின் எடுபிடிகள்'' என்கிற அவப்பெயரில் இருந்து விடுபடவும் வெள்ளையர் வெளியேறுவது உறுதியான பின்னரும் தான் இந்த முடிவுகள் எடுத்தார். அதுவரை நீதிக்கட்சியினருடன் இருந்தார். நாடு விடுதலையடைந்தால் பார்ப்பன ஆட்சி வந்து விடும் என்று கூறி பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதை அண்ணாத்துரை ஆதரித்தார்.

* திராவிட இயக்கத்தின் அடிப்படை தத்துவ நூல், அண்ணாத்துரை எழுதிய ''ஆரிய மாயை'' என்ற நூல். அதில் ஏராளமான, முரண்பாடான, பிழையான கருத்துகள் உள்ளன. திராவிட நாடு என்று நீதிக்கட்சியினர் குறிப்பிட்டது அன்றைய சென்னை ராஜதானியை மட்டும்தான் இதன்படி தமிழ்நாடு, கேரளத்தில் மலபார் மாவட்டங்கள், கர்நாடகத்திலுள்ள குடகு பிரதேசம், ஆந்திராவிலுள்ள சர்க்கார், ராயலசீமா மாவட்டங்கள், தெற்கு ஒரிசா மாவட்டம் ஆகியவை மட்டுமே திராவிட நாடு ஆகிறது.

ஆனால் 1943இல் அண்ணாத்துரை எழுதிய ''ஆரிய மாயை'' நர்மதை ஆற்றுக்குத் தெற்கே உள்ள குஜராத்தின் ப்ரோச், சூரத், டாமன் பகுதிகள், மஹாராஷ்டிர மாநிலம் மற்றும் கலிங்கமும் (ஒரிசா மாநிலம் முழுவதும்) கூட திராவிடத்தில் அடங்கும். மொழிவாரி மாநிலங்கள் அமைந்த பிறகு தமிழகம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா மட்டுமே திராவிட நாடு என்றார் அண்ணாத்துரை.

* ஆரிய அரசுகளான காந்தாரம், காம்போஜம், விதேகம் முதலியன இருந்த போதும் குப்தர்கள், குஷாணர், துருக்கியர், மொகலாயர் காலத்திலும் திராவிடம் தனி நாடாகவே இருந்தது என்றும், திராவிடத்தில் அவர்கள் தலை காட்டவே முடியவில்லை என்றும் ''ஆரியமாயை''யில் எழுதினார். இதெல்லாம் அண்ணாத்துரையின் வரலாற்றுப் புரட்டு. காந்தாரம், காம்போஜம், விதேகம் போன்றவை எல்லாம் பூர்வ குடியிலிருந்து மன்னர் ஆட்சிக்கு மாறிக் கொண்டிருந்தபோது நிலவிய சிற்றரசுகள். குப்தர்கள். மொகலாயர் பேரரசுகளின் கீழ் திராவிடத்தின் பல பகுதிகள் இருந்தன என்பதை உண்மை.

* பகுத்தறிவாளரைப் போல இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களைக் கற்பனையானது, ஆபாசமானது என்ற ஒருபுறம் சாடிக் கொண்டே, அவை உண்மையில் நடந்தவை போலவும் இதிகாசங்களை ஆதாரமாகக் கொண்டு திராவிடர் மீது ஆரிய ஆதிக்கம், நயவஞ்சகம் சூழ்ச்சி வென்றதாக மறுபுறம் எழுதுகிறார் அண்ணாத்துரை. இதிகாசங்கள், புராணங்களில் காணப்படும் மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் அதேசமயம் சிலப்பதிகாரத்தில் மதுரையை எரிப்பதாக வரும் மூடநம்பிக்கைகளையும், ஓரிறைத் தத்துவத்தையும் ஏற்கிறார். திராவிட மன்னர்கள் ஆட்சியின் போது வர்க்க ஒடுக்குமுறையும் சுரண்டலும் இல்லாத ஏற்றதாழ்வற்ற நாகரிகமும் சமூகமும் பண்பாடும் உடைய பொற்காலம் நிலவியதாக எழுதும் அண்ணாத்துரை ''ஆரியம்'' திராவிடத்திற்குள் புகுந்து ஆதிக்கம் பெற்றதற்கு திராவிட மன்னர்களின் ஏமாளித்தனம், ஆரியர்களின் சூழ்ச்சியே காரணம் என்கிறார். இதைச் சொல்லும்போது திராவிடர்களை அவரே இழிவுப்படுத்தும் வகையில் எழுதுகிறார்.

* ஆரியர்கள் யார்? திராவிடர்கள் யார்? என்பதைப்பற்றி முன்னுக்குப் பின் முரணான குழப்பமே அண்ணாத்துரையிடம் காண முடிகிறது. வடநாட்டில் வாழுபவர்கள் எல்லாம் ஆரியர்கள் என்று சில சமயம் குறிப்பிடுகிறார். அப்படியானால் அங்கே உள்ள சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் அனைவரும் ஆரியர்கள் என்றாகிறது. பிராமணர்கள் மட்டுமே என்று பல சமயம் குறிப்பிடுகிறார்கள். வட நாட்டில் வாழுபவர்கள் எல்லாம் ஆரியர்கள் என்று சில சமயம் குறிப்பிடுகிறார். அப்படியானால் அங்கே உள்ள சத்திரியர், வைசியர், சூத்திரர் பஞ்சமர்அனைவரும் ஆரியர்கள் என்றாகிறது. பிராமணர்கள் மட்டுமே ஆரியர்கள் என்று பலசமயம் குறிப்பிடுகிறார். அப்படியானால், ஆரிய சத்திரியர்கள், ஆரிய வைசியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் யார்? தென்னாட்டில் உள்ள பிராமணர் அல்லாதவர் அனைவரும் திராவிடர்கள் என்றால் சத்திரியர், வைசியர் அனைவரும் அதில் அடங்குவார்களா? ஆதிதிராவிடர்களான பஞ்சமர்களும்

> **பார்ப்பனர்களாகவும், சத்திரியர்களாகவும் இருந்த ஆரியர்கள் கூட்டுச் சேர்ந்து ஆதிக்கம் வகிப்பதற்காக வகுத்ததே வர்ணாசிரம தர்மம். பார்ப்பனர்களே அதன் தத்துவ கர்த்தாக்களாக இருந்தனர் என்பதை நேரடியாக எங்கேயும் ராமமூர்த்தி எழுதவில்லை.**

படிப்பகம்

www.padippakam.com

**ஆர்.எஸ். இந்து மத வெறியர்கள் வாதிடுவதைப் போல ஆரியர்கள் இந்த நாட்டின் பூர்வ குடி மக்கள் என்று ராமமூர்த்தி வரலாற்றுப் புரட்டு செய்கிறார். ஆரியர்கள் இந்த நாட்டின் பூர்வகுடிகள் அல்ல; மத்திய ஆசியாவிலிருந்து வந்தேறியவர்கள் என்பதை ராகுலசாங்கிருத்தியாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை' மற்றும் ருஷ்ய சமூகவியலாளர்களின் நூல்களில் இருந்து படிக்கும் (!) போலிக் கம்யூனிஸ்டு அணியினருக்குத்தான் வெளிச்சம்!**

மலைப்பகுதிகளில் வாழும் பூர்வ குடிகளும் மட்டுமே அதிக கலப்பில்லாதவர்கள். மற்ற வர்ணங்களில் வர்ண இன கலப்புகள் நடந்து விட்டன.

— இப்படி அண்ணாத்துரையின் திராவிட மாயைகளையும் சுய முரண்பாடுகளையும் பெரும்பாலும் அதிகமாகவே அம்பலப்படுத்துகிறார் ராமமூர்த்தி. ஆனால் ஊருக்கு குறி சொல்லும் பல்லி தானே கழுநீர்ப் பானையில் விழுந்து விடுவதைப் போல ஆரிய மாயையில் விழுந்து விடுகிறார். நீதிக் கட்சியினரையும் அவரது வாரிசுகளையும் கடுமையாக சாடும் அதேசமயம் பார்ப்பனர்களையும்பார்ப்பனீயத்தையும் அரவணைத்துக் கொண்டு போகிறார் ராமமூர்த்தி.

ஆங்கிலப் பள்ளிகளை புறக்கணித்து தேசியப் பள்ளிகளை நடத்த காந்தி திட்டம் வகுத்தார். நெல்லை - சேரன்மாதேவியில் ''பாரத்வாஜா ஆசிரமம்'' என்று பார்ப்பன முனிவரின் பெயரில் - ஆசிரமம் நடத்தி வந்த வா.வே. சுவாமிநாத அய்யர் அங்கே பார்ப்பன மாணவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் தனித்தனித்தனியே உணவளித்து தீண்டாமை பாராட்டினார். கேள்விப்பட்டு நேரில் போய்ப்பார்த்து வந்த பெரியார் அதை கைவிடக்கோரி ஆத்திரமும் கோபமும் ஏற்பட கிளர்ச்சி நடத்தினார். சமரசம் செய்ய வந்த காந்தி வர்ணாசிரம முறையை ஆதரித்தார். எனவே தொடர்ந்து ''சமபந்தி போஜனம்'' கோரி கிளர்ச்சி செய்து வந்த பெரியார் காஞ்சியில் நடந்த காங்கிரசு மாநாட்டில் பிரச்சினையைக் கிளப்பினார். ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பன தலைவர்கள் அது ஒரு தனியார் பள்ளியில் நடக்கும் முறை; காங்கிரசு அதைத் தடுக்கமுடியாது என்றுவாதிட்டனர்

பெரியார் விடவில்லை. இது ஒரு காங்கிரசுப் பிரமுகர், காங்கிரசின் மூன்று புறக்கணிப்பு இயக்கங்களில் ஒன்றாகிய ஆங்கில கல்வி நிலையங்களைப் புறக்கணிக் திட்டத்தை அமுலாக்குவது என்ற பெய நடத்தி வருகிறார். அப்படியிருக்க தனியார் பள்ளி என்று கூற முடியுமா? இந்த அநீதியான முறை அமுலில் இருக்கிறவரை அந்தப் பள்ளிக்கு காங்கிரசு இயக்கத்தின் தார்மீக ஆதரவு கிடையாது எனப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்று கோரினார் பெரியார். பெருங்கூச்சலைக் கிளப்பி காங்கிரசின் பெரும்பான்மையினர் பெரியாரின் கோரிக்கையை நிராகரிக்கவே அவர் வெளியேறி சுயமரியாதை இயக்கம் தொடங்கினார். இவை ராமமூர்த்தி தரும் விபரங்கள். இங்கே காந்தி, வா.வே.சு.அய்யர், ராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோரின் பார்ப்பனீய - வர்ணாசிரம வெறியை ராமமூர்த்தி சாடவில்லை. வெறுமனே கதை போல கூறிச் செல்கிறார். ஏன்?

1928ல் வகுப்புவாரி பிரதிநித்துவ அரசு உத்திரவைக் கொண்டுவந்தது நீதிக் கட்சி. ''அன்று சட்டசபையில் எதிர்க்கட்சியாக இருந்த சுயராஜ்யக் கட்சியினர் குறிப்பாக அதன் தலைவர் எஸ். சத்தியமூர்த்தி இதனைக் கடுமையாக எதிர்த்தார். இதனால், நிர்வாகத்தில் திறமையும் தரமும் மோசமாகி விடுமாம்; பிரிட்டிஷ் ஆட்சியையே ஒழிக்க வேண்டுமென்று கூறிவந்த கட்சிக்கு அந்த ஆட்சியின் நிர்வாகத்திறமையைப் பற்றியும் தரத்தைப் பற்றியும் அவர் கவலை கொண்டது ஏனோ தெரியவில்லை'' (ராமமூர்த்தி நூல்,பக்142-143).கிண்டலாக விமர்சிப்பது போல தோன்றினாலும் பார்ப்பன சாதி வெறி-காலனிய அரசு விசுவாசம் தான் சத்திய மூர்த்தியின் இந்த செய்கைக்கு காரணம் என்று நேரடியாக ஏன் சாடவில்லை. மாறாக, நூலின் பல இடங்களிலும் சத்தியமூர்த்தியை சீர்திருத்தவாதியாகவும், தேசீய வாதியாகவும் சித்தரிக்கிறார் ராமமூர்த்தி.

அதேபோல் இந்தித் திணிப்பு மற்றும் குற்றப்பரம்பரை ஒழிப்பின் போதும் **ராஜாஜி** நடந்து கொண்டார். ஆந்திராவில் ஏனாதிகள், தமிழ்நாட்டில் கள்ளர் போன்ற சில சாதி மக்களைக் குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் கொண்டு வந்திருந்தது பிரிட்டிஷ் அரசு. அதன்படி இந்தச் சாதி ஆண்கள் எல்லோரும் இரவு வேளைகளில் போலீசு நிலையத்தில் அடைக்கப்படுவார்கள். இதை ரத்து செய்யும்படி அப்போது இருந்த ராஜாஜி மந்திரி சபையிடம் கோரினார். அவர் மறுத்து வந்தார். முத்துராமலிங்கத் தேவர் தலைமையில் ஓராண்டுக்கு மேல் தொடர்ந்து மாநாடுகளும் கிளர்ச்சிகளும் தொடர, வேறுவழியின்றி குற்றப் பரம்பரை ஒழிப்புச் சட்டத்தை ரத்து செய்ய ராஜாஜி சம்மதித்தார்.

1937 இல் ராஜாஜி தலைமையிலான மந்திரி சபை இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது.இந்த இந்தித் திணிப்புக்கு எதிராக பெரியார் தலைமையில் பெரிய கிளர்ச்சி நடந்தது. பெரியார் முதலிய ஆயிரக்கணக்கான எதிர்ப்பு போராட்டக்காரர்களை கைது செய்து கிரிமினல் திருத்த சட்டம் என்கிற கருப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தது ராஜாஜி மந்திரிசபை.

இவையும் ராமமூர்த்தி தரும் தகவல்கள். ராஜாஜி, குற்றப்பரம்ப்ரை ஒழிப்புச் சட்டத்தை ரத்து செய்ய முதலில் மறுத்து வந்ததற்கு அவரது பார்ப்பண சாதி உணர்வுதான் காரணம்; அதேபோல இந்தித் திணிப்பு கும் இந்தி - சமஸ் கிருத உறவுதான் கா ணம். இதைச் சாடாது தயக்கம் கார மாகவே முதலில் குற்றப் பரம்பரைச் ச டத்தை ரத்து செய்ய ராஜாஜி தயங்கியதா கூறுகிறார் ராமமூர்த்தி. இந்தித் திணிப்பு கும் அடக்கு முறைக்கும் காரணம் ராஜா யின் விடாப்பிடியான கருத்தே அடிப்பன என்று மழுப்புகிறார் ராமமூர்த்தி.

காங்கிரசு பார்ப்பனத் தலை வர்களை மிகச் சிறந்த தேசிய, சீர்திருத் வாதிகளாக சித்தரிக்கிறார். கடன் நிவா ணச் சட்டம், ஜமீன் - இனாம் ஒழிப் மசோதா போன்று பல சீர்திருத்தங்களை ராஜாஜி மந்திரிசபை செய்ததாக புகழ்கிறார். கடைசியாகக் குலக்கல்வித் திட்டம் வரை பார்ப்பணக் கண்ணோட்டத்தில் ராஜாஜி ஊன்றி நின்றதைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை.

பார்ப்பணத் தலைவர்களை இப்படித் தாங்கிப் பிடிக்கும் ராமமூர்த்தி, இந்த நாட்டில் வர்ணாசிரம சாதியத் தோற்றங்களுக்கு பாப்பணர்கள் காரணமாக இருந்தார்கள் என்கிற அப்பட்டமான உண்மையைக் கூட மூடி மறைக்கிறார். வர்ணாசிரம தர்மத் தின் பாகுபாடுகளைப் பற்றி கூறும் போது ''அந்த மதத்தைப் பரப்பியவர்கள் அதன் தத் துவங்களைத் தயாரித்து'' விளக்கியவர்கள் பிராமணர்கள் என்று ஒப்புக் கொள்கிறார் ராமமூர்த்தி.

ஐந்து பிரிவாகக் கூறும், ''ஒரு ஜாதி அமைப்பை மன்னர்களும் அவர்களுக்கு உதவி செய்யும் கூட்டமும் உருவாக்கினர். ஜாதிய அமைப்பை தங்கள் சௌகரியத்திற்காக ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு சாதாரண மக்களுக்குத் தெரியாதவை எல்லாம் தெரியும் என்று கூறி, அதற்காக, பல புரட்டுகளையும் கட்டுக்கதைகளைம் சிருஷ்டித்தனர். இந்த வர்ணாசிரமத்தை மேலும் பலமாக நிலை நாட்ட பராசுரர், விஷ்னு, மனு போன்றவர்களால் ஸ்மிருதிகள் என்ற சட்ட நூல்கள் மன்னர்களின் ஒப்புதலுடன் இயற்றப்பட்டன; அந்தச் சட்டங்களை அமுலாக்குவது மன்னிரின் கடமை'' (மேற்படிநூல், பக்.259)

பார்ப்பணர்களாகவும், சத்தியர்களாகவும் இருந்த ஆரியர்கள் கூட்டுச் சேர்ந்து ஆதிக்கம் வகிப்பதற்காக வகுத்ததே வர்ணாசிரம தர்மம்; பள்ப்பணர்களே அதன் தத்துவ



படிப்பகம்

www.padippakam.com

ர்த்தாக்களாக இருந்தனர் என்பதை நேர டியாக எங்கேயும் ராமமூர்த்தி எழுத வில்லை. எல்லாம் மன்னர்களின் (ஆரிய சத்திரியர்கள் என்று கூடச் சொல்லவில்லை) செயல்கள்; பார்ப்பனர்கள் உதவி மட்டுமே செய்த அப்பாவிகள் என்பதாக—அதுவும் மறைமுகமாக எழுதுகிறார்.

''விவசாயம் வளர்ந்து விட்ட பிறகு, மன்னர்கள் அடிக்கடி யாகங்கள் செய்தபோது, பாடுபடும் உழவர்களிடமிருந்து ஆடு மாடுகளைப் பலவந்தமாக கொடுக்கும்படி நிர்பந்தித்தனர். அதே போன்று வணிகத் துறையில் ஈடுபட்டிருந்த வைசியர்கள் இந்த படோடாபமான யாகங்களுக்கு பணமும் ஏனைய பொருட்களும் கொடுக்கும்படி நிர் பந்திக்கப்பட்டனர் '' (ஷ பக்.257)

இந்த யாகங்கள் யாருடைய தூண்டுத லால், யாரால் நடத்தப்பட்டன? பார்ப்பனப் பண்டிதர்களால்தானே? மன்னர்கள் நிர்பந் தித்தனர் என்று ஒரு பகுதியை மட்டும் குறிப் படுகிறார் ராமமூர்த்தி. மேலும் மன்னர்க ளுக்கு (சத்திரிய குலத்துக்கு) மேலே பிராம ணர்களை வைத்துத்தானே சாதிய வர்னாசி ரம தர்மம் வகுக்கப்பட்டிருந்தது. இவை பற்றி கண்மூடிக்கொள்கிறார் ராமமூர்த்தி.

அதுமட்டுமல்ல, ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறியர்கள் வாதிடுவதைப் போல ஆரி யர்கள் இந்த நாட்டின் பூர்வகுடி மக்கள் என்று ராமமூர்த்தி வரலாற்றுப் புரட்டு செய் கிறார்.

''ஆரியர்கள் என்றுபெயர் கொண்டு எந் தக் கூட்டத்தினரும் வேறு எந்த நாடுக ளில் இருந்தும் இந்தியாவுக்குள் நுழைந் தார்கள் என்று சொல்வதற்கு வரலாற்று ஆதாரம் கிடையாது. அதனால்தான் அந்த ஆரியர்கள் என்பவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? என்பதைப் பற்றி நடத்திய ஆராய்ச்சிகளில் ஒரு முடிவுக்கும் வர இயல வில்லை.'' (ஷ பக்.256)

ஆரியர்கள் இந்த நாட்டின் பூர்வகுடிகள் அல்ல; மத்திய ஆசியாவிலிருந்து வந்தேறி யவர்கள் என்பதை ராகுலசாங்கிருத்தியாய னின் 'வால்காவிலிருந்து கங்கை வரை' மற் றும் ருஷ்யசமூகவியலாளர்களின் நூல்க ளில் இருந்தும் படிக்கும் (!) போலிக் கம்யூ னிஸ்டு அணியினருக்குத்தான் வெளிச்சம்! ராமமூர்த்தி எங்கே இருந்திருக்க வேண்டிய வர் என்பதை இப்போதாவது அவர்கள் உணருவார்களா?

இதே நூலில் ஐந்து பக்கங்களுக்கு முன் ராமமூர்த்தி எழுதுகிறார், ''இவ்வாறு உதய மான ஜாதிப் பிரிவினையில், அது உதய மான காலத்தில் பிராமணர்கள் எனப்படு வோரில் வெளியிலிருந்து வந்த கூட்டத் தைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம். ஏற்க னவே இங்கு குடியிருந்த மக்களிடமிருந்து தோன்றிவர்களும் இருக்கலாம்'' (ஷ பக்.251)

ஆரியத்தை ஏந்தி உலகை ஆளப்புறப் பட்ட இட்லரும், ஈரானை ஆயிரம் ஆண் டுகள் ஆண்ட ஷாவின் பரம்பரையினரான ஆரிய மேர்களும் தமது முன்னோடிகள் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ள ராமமூர்த்தி ஏன் தயங்குகிறார்? பார்ப்பனீ யப் பற்று காரணமாக சாதிய சகதியில் முழுக்க நனைந்த பிறகு இன்னும் எது அவ ரைத் தடுக்கிறது? கம்யூனிச போர்வை தானோ!

பெரியாரும் திராவிட இயக்கத்தினரும் ஆரம்பத்தில் பார்ப்பனீயத்தை எதிர்த்து வந் தார்கள், ஆனால் போகப் போக பார்ப்ப னர்களை எதிர்ப்பவர்களாக சீரழிந்து போனார்கள் என்பதாக ராமமூர்த்தி குறை பட்டுக் கொள்கிறார். பார்ப்பனீயத்தைப் பொறுத்தவரை தானும் ஏற்றுக் கொள்ளாத வர் என்பதாக ஒப்புக்குச் சொல்லுகிறார். அதே சமயம் வர்ணாசிரம தர்மத்தை வகுத் துச் சொல்லும் ரிக் வேதத்தை மெய்சிலிர்க்க வாய் நிறைய வாழ்த்துகிறார். ரிக் வேத சமஸ்கிருதப் பாட்டுக்களை இயற்றிய புல வர்களின் கற்பனா சக்தியை வியக்காமல் இருக்க முடியாது'' (ஷ பக்.256) என்று புல்லரிக்கச் சொல்லுகிறார்.

அழகான வடிவத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று வியந்து பாராட்டுவாரா னால் மார்க்சியவாதிகள் வடிவத்தை மட் டும் தனியே பிரித்தெடுத்து பாராட்டுவது சரியா? பிற்போக்கான வர்ணாசிரம் மூட நம்பிக்கையை உள்ளடக்கமாகக் கொண்டி ருக்கிறதே ரிக்வேதம் அதை வைத்துத் தானே முடிவுக்கு வரவேண்டும். பிற்போக் கான கருத்து எவ்வளவு அழகாக (!) சொல் லப்படுகிறதோ அவ்வளவு ஆபத்தானது, மக்களுக்கு எதிரானது என்பது தானே மார்க்சிய கண்ணோட்டம்?

பார்ப்பனீயத்தை நியாயப்படுத்தும் வகையில் பின் வருமாறு ரிக்வேத பாட லைக் காட்டி ராமமூர்த்தி எழுதுகிறார்.

''அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை. சந் திரனும், தாரகைகளும் (நட்சத்திரங்களும்) ஒளி வீசுவதில்லை''

''இந்த மின்னல்களும் ஒளி வீசுவ தில்லை. அப்படி இருக்கும் போது இந்த அக்கினி (நெருப்பு) எப்படி ஒளி வீச முடி யும்?''

''அதுதான் (அந்த பரப்பிரும்மம்தான்) ஒளி வீசுகிறது. அதன் பிரகாசத்தில் இவைக ளெல்லாம் ஒளி வீசுகின்றன'' என்பது இந் தப் பாட்டின் பொருள். இந்தக் கவியின் கவிதைத் திறனை கற்பனா சக்தியை மெச்சா மலிருக்க முடியாது. இந்தக் கவி கூறும் பரப் பிரும்மம் என்பது ஒன்று உண்டென்று அந் தக் காலத்திலும், இன்றுவரையும், உலகத்தி லுள்ள எல்லா மதத்தினராலும், கடவுள், ஆதிபராசக்தி, ஈசன், அல்லா, ஜிஹோவா என்று பல பெயர்களில் நம்பப்படுகிறது.

''பரப்பிரம்மம்'' என்று பார்ப்பனீயம் கற்பித்ததை உலகத்திலுள்ள எல்லா மதத்தி லும் சொல்லப்படும் கடவுள்கள் போன்ற தென்று சமன்படுத்தி ஒப்பிடுகிறார், ராம மூர்த்தி. அதனால் பரப்பிரம்மம் என்பது மக்களை ஏய்க்க பார்ப்பனீயம் திட்டமிட்டு சூழ்ச்சியோடு உருவாக்கியது; பரப்பிரம்மத் தைப் பற்றி கேள்வி கேட்பவர்கள் தலைகளை அறுப்பது என்கிற அளவு கொடு ரமான மதவெறியைப் பார்ப்பனர்கள் ஏற்ப டுத்தினார்கள். ராகுல சங்கிருத்தியாயன் எழுதிய வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலே இதற்கு ஆதாரம். ஆனால் இதையெல்லாம் மறைப்பதன் மூலம் பார்ப் பனீயத்தை மறைமுகமாக ஆதரிக்கிறார் ராமமூர்த்தி. இப்படி ஒரு கம்யூனிச துரோகக் கூட்டமே கிளம்பியிருக்கிறது. முத லில் டாங்கே வேதங்களைத் தூக்கிபிடிக் கும் வேலை செய்தார். ''வேதங்களின் நாடு'' என்கிற நூலில் நம்பூதிரிபாடு இதே வேலை செய்துள்ளார். ராமமூர்த்தி தனது மரண சாசனமான ''விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்கிற நூலில் இதே வேலையை செய்துள்ளார். இவர்கள் எல் லாம் கம்யூனிச போர்வையில் பாட்டாளி வர்க்க இயக்கத்தை மாசுபடுத்தும் பார்ப்ப னீய துரோகிகள்.

(தொடரும்)

## திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியம் கீரிமேடு தோழர் வீரப்பன் படுகொலை!

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் திரு வெண்ணெய் நல்லூர் ஒன்றிய செயலாள ரான கீரிமேடு தோழர் வீரப்பன் ஓட்டுப்பா தையில் புரட்சி நடத்துவோம் என்று சொல் லும் போலி கம்யூனிஸ்டு கட்சியில் செயல் பட்டார். அதிகாரவர்க்க துணையோடு பொது சொத்துக்களை கொள்ளையடித்த உள்ளூர் ஆதிக்க சக்திகளை உறுதியாக எதிர்த்து போராடியவர். புரட்சிகரமான நடைமுறையோடு மக்கள் பிரச்சினையில் போராடிய உறுதி மிக்க போராளி.


புதிய ஜனநாயகம் வாசகராக இருந்த வீரப்பன் புரட்சிகர அமைப்போடு பல முறை விவாதித்து அதன் கருத்துக்களை சரி யென ஏற்ற போதிலும், 'அமைதி வழியில் புரட்சியை சாதிப்போம்' எனும் போலிகள் தலைமையை விட்டு வெளியேற தயக்கம் காட்டியவர்.

தங்கள் கொள்ளை சுரண்டலுக்கும், அதி கார முறைகேடுகளுக்கும், சாதிய அடக்கு முறைக்கும் எதிராய் இருந்த தோழர் வீரப் பனை உள்ளூர் ஆதிக்க சக்திகள் ஒன்று சேர்ந்து சமீபத்தில் படுகொலை செய்து விட் டனர். இனி தங்கள் கொள்ளைச் சுரண்டலை தடையின்றி நடத்தலாம் என மனப்பால் குடிக்கின்றனர்.

தோழா வீரப்பன் சிந்திய இரத்தம் வீண் போகாது. மேலும் போராட்ட உணர்வுள்ள தோழர்களும், மக்களும் உதிப்பது உறுதி. பிற்போக்கு, பிழைப்புவாதிகள் மடிவதும் உறுதி!

தகவல்:
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியம்**

www.padippakam.com



# அதிகார வர்க்க கொள்ளையர்களுக்கு எதிரான ஆட்டோ ஓட்டுநர்களின் போராட்டம்

மூச்சுமுட்டும் சென்னை நகர அரசு பல்லவன் பேருந்தில் பயணம் செய்வதை தொல்லையாக கருதும் மேல்மட்ட நடுத்தர வர்க்கத்தின் கௌரவமான பயண வாகனம் ஆட்டோ ரிக்ஷா. அவசரத்திற்கு, நடுத்தர வர்க்கத்திற்கும், அடிமட்ட மக்களுக்கும் கூட தவிர்க்க முடியாத தேவையாக இருந்து வரும் போக்குவரத்து. இருந்தும், அடிக்கடி பரவலான பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாவதும் இந்த ஆட்டோ போக்குவரத்து தான். காரணம், பயணிகளிடம் பெரும்பாலான ஆட்டோ ஓட்டுநர்கள் நடந்துக் கொள்ளும் முறையும் நியாயமற்ற முறையில் கேட்கும் பயணக் கட்டணமும் தான்.

சென்னை மற்றும் அதன் புறநகரங்களில் ஓடும் 20,000க்கும் மேற்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களில், சிலநூறு ஆட்டோ ரிக்ஷாக்களைத் தவிர, மற்றவை அனைத்தும் எம்.பி., எம்.எல்.ஏ., உயர் அதிகாரிகள், வட்டிக்கடை சேட்டுகளுக்கு சொந்தமானவை. இவர்களிடம் வாடகைக்கு வண்டி எடுத்து ஓட்டும் ஆட்டோ ஓட்டுனர்கள் பலவித சுரண்டலுக்கு ஆளாகின்றனர். வண்டி வாடகை, ஏறிவரும் பெட்ரோல் செலவு, போக்குவரத்து போலீசாரின் பகற்கொள்ளை, வண்டிக்காகும் சிறுசிறு பழுது செலவுகள் என இவ்வளவையும் மீறி ஆட்டோ தொழிலாளி தன் தொழிலுக்கான கூலியையும் அதிலிருந்து எடுக்க வேண்டும்.

பல வழிகளிலும் தம்மீது திணிக்கப்படும், பகற்கொள்ளையை போராட்டத்தின் மூலம் முறியடிக்க முன்கை எடுக்காமல், தம் மீது சுமத்தப்படும் இப்பளு முழுவதையும் நியாயமற்ற முறையில் ஆட்டோ தொழிலாளர்கள் தம்மிடம் வரும் பயணிகள் தலை மீது சுமத்தி விடுகிறார்கள். சம்பளம் போதவில்லையென லஞ்சம் வாங்கும் அடிமட்ட அரசு ஊழியர்களுக்கும் இவர்களது செய்கைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை தான்.

பல்வேறு தொழிலாளர்களைப் போலவே, இத் தொழிலாளர்களையும் இப்படி சீரழித்ததற்கான முக்கிய பங்கு ஓட்டு சீட்டு அரசியல் தொழிற்சங்க தலைமையையே சாரும். தம்முடைய பிழைப்புவாத தொழிற்சங்க தலைமை பறி போகாமல் இருக்க, தொழிலாளர்களின் முறைகேடுகளை இத்தலைமைகள் கண்டுக்கொள்வதே இல்லை; மாறாக முறைகேடுகள் மூலம் தொழிலாளர்கள் சம்பாதிக்கும் வருமானத்திலிருந்து சந்தா வசூலிப்பு, கட்சி நிதி வசூலிப்பு என மறைமுகமாக அதில் குளிர் காய்கின்றன.

இம்மாதிரியான மஞ்சள் தொழிற்சங்க தலைமையிடமிருந்து விடுபட்டு தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை தொடர்ச்சியான போராட்டங்களின் மூலம் பெறுவதற்கு ஆட்டோ ஓட்டுனர்கள் முயலும் போது மட்டுமே அவர்களுக்கும் பொது மக்களுக்குமான முரண்பாடு தீர்க்கப்படும்.

அவ்வாறான வழியில், ஆட்டோ முதலாளிகளான கந்து வட்டி சேட்டுகளையும், போக்குவரத்து போலீசாரின் பகற்கொள்ளையையும், அடக்குமுறை அரசு எந்திரத்தின் தற்காலிக சூத்தரதாரியான கவர்னர் அலெக்சாண்டரின் அதிகார திமிர்தனத்தை எதிர்த்தும் ஆட்டோ ஓட்டுனர்கள் கிளர்ந்தெழுந்திருப்பது முற்றிலும் நியாயமே.

குறிப்பாக, சுத்தம் சுயம்பிரகாசர், சட்டத்தின் ஆட்சியை நேர்மையாக நிலைநாட்ட வந்தவர், தமிழ்நாட்டு நிர்வாக சீர்கேடுகளை திருத்த வந்த நிர்வாகப்புலி என்றெல்லாம் புகழப்படுகிற ராஜீவின் தமிழ்நாட்டு ஏஜண்ட், உளவு புகழ் அலெக்சாந்தர் ஆட்சியின் தலைமையில் நடக்கும், அதிகார வர்க்கத்தின், போலீசின் காட்டு தர்பாரை, லஞ்சலாவண்ய ஆட்சியை தோலுரித்து நடக்கும் ஆட்டோ ஓட்டுனர்களின் தீரமான, கட்டுப்பாடான நீண்ட போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது பொதுமக்களின் கடமையாகும்.

- மூன்று முறை பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டு உள்ளது. அரசு பேருந்து, ரயில் கட்டணங்கள் முறையே 2,3 முறை உயர்த்திய அரசு ஆட்டோ மீட்டர் கட்டணத்தை மட்டும் உயர்த்தவில்லை. எனவே, மீட்டர் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும்.
- போக்குவரத்து போலீசு, அடிக்கடி ஆட்டோக்களை நிறுத்தி, அந்த இடத்திலேயே அடாவடித்தனமாக அபராதம் போடுகிறது. நீதிமன்றத்தில் வழக்காட அனுமதி இல்லை. பணம் உடனே கட்டவில்லையெனில் வண்டியை மடக்கி வைத்து விடுகின்றனர்; அதற்கு அத்தாட்சி தருவதில்லை. எனவே, தடலடி, உடனடி அபராதம் வசூலிக்கும் போக்குவரத்து போலீசுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையை ரத்து செய்ய வேண்டும்; வழக்காட உரிமை வேண்டும்.
- தொடர்ந்து 10 வருடகாலம் ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்களுக்கு சொந்தமாக அரசே ஆட்டோ உரிமம் (பெர்மிட்) வழங்க வேண்டும்.

இம்மூன்று கோரிக்கைகளை முக்கியமாக வைத்து, சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., தி.மு.க தொழிற்சங்கம் போன்றவை இப்போராட்டத்திற்கு அறைகூவல் விட்டன. மேலும் ஆட்டோ ஓட்டுனர்களின் பிரச்சினைகளைப் பற்றி இந்த மூன்று சங்கங்களும் பேசி 25.4.88 அன்று கூட்டு நடவடிக்கை எடுப்பது என முடிவெடுத்திருந்தன. பிரச்சினைகள் பெரிதாகவே ஏப்ரல் 16ந் தேதியே ஓட்டுனர்கள் தன்னெழுச்சியாக போராடக் கிளம்பினர். இன்று இச்சங்கங்கள் போராட்டத்தை தொடர்கின்றன. பதினோரு நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து போராட்டம் உறுதியாக நடப்பதே போக்குவரத்து போலீசின் பூதாகரமான சுரண்டல் கொள்ளையை பளிச்சென காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

**கழுத்தைச் சுற்றிவளைத்து நெருக்கும் பகாசூரக் கொள்ளை — போலீசின் சுரண்டல்;**

✱ ஒரு நபர் எத்தனை கிலோ லக்கேஜ் ஏற்றலாம் என சட்டப்பூர்வ அறிவிப்பு இல்லை.

ஒரு மில்டரிகாரர் வருகிறார் எனில் ஏகபட்ட லக்கேஜ் வரும். அதிக எடை ஏற்ற முடியாது என்றால் மறுத்தார் என்று வழக்கு அபராதம். ஏறிச் சென்றால் வழியில் இன்னொரு போலீசு மறித்து அதிக லக்கேஜ் என அபராதம்.

✱ ஆட்டோ உரிமத்தில் செல்வதற்கு தகுதியான சாலைகளில் போகலாம் என குறித்துள்ளனர். சில தனியார் சாலைகளில், அது மிக மோசமாயிருந்தாலும் போக வேண்டுமென நிர்ப்பந்திக்கின்றனர். போனால் டயர் அடிப்பட்டு பழுதாகும். போக மறுத்தால் புகார் பேரில் வராத கேசு எழுதி அபராதம் போடுகின்றனர்.

✱ பெரும்பாலான வண்டிகள் ஹயர் பர்சேஸ் என்பதால் ஆர்.சி.புக்.சேட்டிடம்தான் இருக்கும். தரமாட்டான். பிரதி காண்பித்தாலும் போலீஸ் ஏற்பதில்லை.

டிரைவர் வண்டி ஓட்டும்போது ஆட்டோ சொந்தக்காரர் டிரைவரின் லைசென்ஸ்சையும் வாங்கி வைத்திருப்பார். இதற்கும் பிரதி கொடுத்தால் போலீஸ் ஏற்பதில்லை.

ஆர்.சி.புக், லைசென்ஸ் இல்லாததற்கு அபராதம் வசூல் செய்யப்படும்.

✱ ஆட்டோவுக்கு ஹைவேஸ் மஞ்சள் கலர் அடிக்க வேண்டும் என்கின்றனர். ஹைவேஸ் மஞ்சள் என ஒரு பெயிண்ட் வகை இல்லை. போலீசு பார்த்து இது ஹைவேஸ் மஞ்சள் இல்லையென்றால் அபராதம் கட்ட வேண்டும். மறுக்கவோ, வழக்காடவோ அனுமதி கிடையாது.

✱ டிரிப் ஷீட் என ஒன்று பராமரிக்க வேண்டும் என சட்டம் உள்ளது. பிரச்சினை ஏதாவது வந்து டிரிப் சீட்டைப் பார்க்க டிரைவர் கூறினால், போலீசார் மறுத்து விடுவார்கள். பிறகு ஏன் டிரிப் சீட் இல்லையெனில் அபராதம் போடுகிறீர்கள் என கேட்டால் லத்திதான் பேசும்.



# மே நாள் சூளுரை!

*ரஷிய — அமெரிக்க வல்லரசுகளின் மேலாதிக்கத்தை முறியடிக்க*
*படர்ந்துவரும் பாசிச அபாயத்தை வேரறுக்க*
*சாதி — மதவெறிச் சக்திகளைக் கருவறுக்க*
*சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துடன் ஓரணியில் அணிதிரண்டு*
*ஓட்டுப் பாதையைப் புறக்கணித்து*
*ஆயிரமாயிரம் தியாகிகளின் உதிரத்தால் சிவந்த*
*ஆயுதந்தாங்கிய புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற*
*இம் மே நாளில் சூளுரைப்போம்!*

*—ஆசிரியர் குழு புதிய ஜனநாயகம்.*

✱ எத்தனை வயதுக்குப் பின் ஒரு நபர் என்ற கணக்கிலும் போலீசு கொள்ளை. ஓரிடத்தில் ஒரு போலீசு, குழந்தைதான் ஏற்றிச் செல் என உத்தரவிட, இன்னோரிடத்தில் அதிகப்படி நபர் என அபராதம் வசூலிக்கின்றனர்.

✱ போலீசார் 4,5 பேர் வந்தால் மறுப்பின்றி ஏற்றிக் கொள்ள வேண்டும். மறுத்தால் பொய் வழக்கு பதிவு செய்யப்படும்.

✱ வாட்டசாட்டமாக, டிப்டாப்பாக ஒரு வாடிக்கையாளர் பெட்டியுடன் ஏறுகிறார் எனில் மறுக்க முடியாது. மறுத்தால் கேசு எழுதப்படும். ஏற்றிச் செல்லும் போது போலீசார் மடக்கி வாடிக்கையாளர் கடத்தல் பேர்வழி என கண்டால், உடனே ஆட்டோ கடத்தலுக்கு உடந்தை என முடக்கப்படும்.

✱ ஆட்டோ சொந்தக்காரர் டிரைவரை வேலைக்கு அமர்த்தியிருக்க ஏவிடி (AVT) பார்ம் என ஒன்று தர வேண்டும். சமயத்தில் அது இல்லாமற் போகலாம். யாராவது டிரைவர் வராத நேரத்தில் தற்காலிகமாக ஒரு டிரைவர் வந்தால் ஏவிடி பார்ம் தரமுடியாமற் போகும். இது இல்லையெனில் போலீசார் அபராதம் போடுகின்றனர்.

✱ மீட்டர் சரியாக வேலை செய்யவில்லை என வாடிக்கையாளர் கருதினால் (மீட்டர் சரியாக இருந்தாலும் கூட) பரிசோதனை எதுமின்றி அபராதம் விதிக்கப்படும்.

✱ நாய், பூனை, ஆயில், பிலிம், ஆசிட் போன்ற பொருட்கள் ஏற்ற அனுமதி கிடையாது. மறுத்தால் வரவில்லை என புகார் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்படும்.

✱ வண்டியை மடக்கும் போது மேற்கூறிய எல்லாமே சரியாக இருப்பினும் அதிகப்படி வேகம் என பணம் பறிக்கின்றனர். ஆதரம் கூறி வாதாட முடியாது.

✱ தற்போது ஆட்டோ ஓட்ட டிரைவிங் லைசென்ஸ் தருவதில்லை. கார் லைசென்ஸ் எடுத்துக் கொள் எனச் சொல்லிவிடுகின்றனர். ஆனால் ஆட்டோ லைசென்ஸ் இல்லையென கேசு எழுதி அபராதம் வசூலிக்கின்றனர்.

✱ யாராவது ஒருவர் மந்திரி, எம்.எல்.ஏ. என சந்திக்க விரும்பி (லஞ்ச, ஊழல் முறைகேட்டுக்கு) ஆட்டோவில் சென்றால் சிறிது சிறிது தூரம் சென்று வெயிட்டிங் போட்டு விடுவார். ஒருநாள் முழுக்க கூட வீணாகலாம். இதற்கு மறுத்தால் அபராதம். சென்றால் வருவாய் இன்றி கடன்காரனாக வேண்டிய அபாயம்.

✱ தற்போதைய 'உளவு புகழ்' கவர்னர் ஆட்சியில் ஆட்டோ மீனம்பாக்கம் விமான நிலையம் சென்றால் கூட அபராதம். ஏனெனில் அது சென்னை நகருக்கு வெளியே என கூறப்படுகிறது.

ஒருபுறம் கந்துவட்டி கொள்ளையனின் ஈவிரக்கமற்ற சுரண்டல், மறுபுறம் சட்டபூர்வ ரௌடிகளான போக்குவரத்து போலீசாரின் வழிப்பறிக் கொள்ளை - இவற்றில் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் ஒன்றுபட்டு போராடப் புறப்பட்டுவிட்டனர். சந்தர்ப்பவாதத் தலைமை எந்நேரமும் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கலாம்! ஆட்டோ தொழிலாளர்கள் எச்சரிக்கையோடு இருந்து போராட்டத்தை முன் எடுக்க வேண்டும்.

*சென்னையில் ஆட்டோ ஓட்ட அனுமதி தருபவர்கள் பிராந்திய போக்குவரத்து அதிகாரிகள் (Regional Transport Authority). நேரடியாக அனுமதி பெறுவது குதிரைக் கொம்புதான். ஏனெனில் எம்.பி, எம்.எல்.ஏ., அதிகாரிகள் கோட்டா போக மீதமிருப்பதை வட்டிக்கடை சேட்டுகள் பினாமி பெயர்களில் வாங்கி முடக்கிக் கொள்கின்றனர். அனுமதிக்கான அரசுக் கட்டணம் ரூ.250 மட்டுமே.*


*நாம் ஆட்டோ அனுமதி வாங்க வேண்டுமென்றால் கந்து வட்டி சேட்டிடம்தான் சொல்ல வேண்டும். ஹயர் பர்சேஸ்க்கு (Hire Purchase) தான் வண்டி வாங்க முடியும். நாம் 25,000 ரூ. கட்டி சேல்ஸ் டீட், டிரான்ஸ்பர் டீட் என 42 பேப்பர்களில் கையெழுத்து போட்டு வண்டியை எடுத்துக் கொள்ளலாம். மாதா மாதம் 1750 ரூ. என 30 மாதத்திற்கு கட்டினால்தான் வண்டி சொந்தமாகும். இதுதான் ஹயர் பர்சேஸ். மீட்டருடன் அனுமதி உடைய ஆட்டோ மதிப்பு 32,000 ரூபாய்க்குள்தான். ஆனால் மொத்தம் கட்டுவது இந்த கணக்குப்படி ரூ.77500. சில இடங்களில் ரூ.30,000 கட்டி மாதா மாதம் ரூ.1500 கட்ட வேண்டும் மொத்த விலை ரூ.75,000.*

*ஆட்டோவின் உண்மை மதிப்பை விட இருமடங்குக்கும் மேலே பணம் கட்டினால்தான் ஆட்டோ சொந்தமாக வாங்க முடியும்.*

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ, இந்தியாவின் இளைய பிரதமர் ராஜீவ்காந்தி இரண்டாம் வகுப்பு ரயில்பெட்டியில் பிரயாணம் செய்கிறார். அதிசயம்! ஆச்சிரியம்!! ஆனால் உண்மை!!! ஏறினால் விமானம், இறங்கினால் குண்டுத்துளைக்காத கார், நடந்தால் பலத்த கறுப்புப் பூனைகள் காவல், இடை இடையே ஹெலிக்காப்டர் பயணம் என ஊதாரித்தனமாக செலவு செய்பவர்; உல்லாசமாக பொழுதைக் கழிப்பவர் ஏன் இப்படி மாறிவிட்டார்? சொந்த நாட்டின் ஏழ்மையை உணர்ந்து மனம் திருந்தி விட்டரா?

இல்லை; இது ஒருவிதமான குரூரபுத்தி. கோமாளித்தனமான ஆசை! உயர்தர கோமான்களின் சோம்பேறி பிள்ளைகளுக்கு வரும் கோணங்கி ஆசை போன்றது!

ரயில் புறப்பட்ட சென்னை திரிசூலம் ரயில்நிலையம் முதல் மறைமலையடிகள் நகர் புதிய காமராஜர்ரயில் நிலையம்வரை பாதுகாப்புக்கென இரு மருங்கிலும் போலீசு கண்காணிப்பு; உடனடி செய்தித் தொடர்பு வலைப்பின்னல், அதற்கான செலவு. 21 கி.மீ. தூரத்திதைக் கடப்பதற்கு 4 மணிநேரம் ரயில்களும் ரத்து, பொதுமக்கள் அவதி மற்றும் ரயில்வே நிர்வாகத்திற்கு வருமானம் இழப்பு. ராஜீவ் ரயிலுக்குமுன் 'சோதனை ஓட்டம் நடத்திக் கொண்டு ஒரு குட்டி ரயில்.

ஆக, நவீன பேரரசர் ராஜீவ் தன் பரிவாரங்கள் சூழ மின்சார பல்லக்கில் பவனி சென்றார் என்பதை உண்மை மாறாக, பிரதமர் ராஜீவ் இரண்டாவது வகுப்பு பெட்டியில் பயணம் செய்தார் எனப்தெல்லாம் திரித்து கூறப்பட்ட செய்தி!

இதோ,சுவரில் 'வரட்டி'த் தட்டியது மாதிரி ஓடும் ரயிலில் ஒட்டிக் கொண்டு செல்லும் சென்னை நகர ரயில் பிரயாணிகள். இப்படித்தான் பிரயாணம் செய்வோம்' என அடம்பிடித்து தொத்திக் கொண்டு, அதில் சுகம் காண்பவர்கள் அல்ல, இவர்கள்

ராஜீவின் 'ஆத்தா', 'தாத்தா' ஆட்சிகள் குடிமக்களுக்கு கொடுத்த தண்டனை இது. குறைந்த விலையில் குடிமக்கள் அதிக தண்டனையை அனுபவிப்பதா என ராஜீவும் தம் பங்கு தண்டனையாக பிரயான கட்டணத்தை உயர்த்தி விட்டார்.

''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்பது எல்லாம், 'சும்மா' ஒரு பேச்சுக்குத்தான்! ''எங்களுக்கும், தனிரயில் பயண ஏற்பாடு வேண்டும்; குறைந்தப் பட்சம் நெரிசல் இல்லாத பயணமாவது ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று குடி மக்கள் யாரும் இந்திய அரசின் மீது வழக்கு தொடுக்க முடியாது!

ஊதாரிப் பிரதமரின் உல்லாச விருப்பத்துக்கு தனிரயில் ஏற்பாடு. அவர் உயிர் பாதுகாப்புக்கென மக்கள் பணம் குப்பையாக இறைப்பு! உழைக்கும் மக்களுக்கோ ஓடிக் கொண்டிருக்கும் மூச்சையும் நிறுத்த வைக்க நெரிசல் போக்குவரத்து; ஓட்டிக் கொண்டிருக்கும் உயிரையும் தட்டிப்பறிக்க பாதுகாப்பாற்ற போக்குவரத்து ஏற்பாடு!

இன்னும் எத்தனை நாள்தான் இதை சகித்துக் கொண்டு வாழ்வது?



படிப்பகம்